# வேல்ஸ்

## அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்



(DEEMED TO BE UNIVERSITY Estd., u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்றிதழ் 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம், சென்னை, இந்தியா

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு




வேல்ஸ் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திருமிகு எம். வெங்கைய நாயுடு அவர்களும் வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்களும் மதிப்புறு டாக்டர் பட்டத்தினை விளையாட்டு வீராங்கனை பத்மஸ்ரீ பி.டி.உஷா, இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி வளர்ச்சியின் தலைவர் டாக்டர் ஜி.சத்திஷ் ரெட்டி, தொழிலதிபர் திரு.எஸ். ஜேவியர் பிரிட்டோ ஆகியோருக்கு வழங்குதல்; நிகழ்வில் இணைவேந்தர்கள் டாக்டர் ஆர்த்தி கணேஷ், பேராசிரியர் ஏ.ஜோதிமுருகன், பதிவாளர் பேராசிரியர் ஏ.ஆர்.வீரமணி ஆகியோர் பங்கேற்றல்


சிறகு : 5 இறகு : 8
07, அக்டோபர் 2019
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை
மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



# Vision and Mission

**Dr. Ishari K. Ganesh**
M.Com., M.B.A., M.L., Ph.D.

Chancellor
VELS University

**Founder - Chairman**
VELS Group of Institutions

## Our Vision

Vels University strives to be a beacon of excellence in higher education by effectively providing its students with high standards of education and rigorous training with ample scope for the all-round development of the personality of the students and to promote positive change and social justice for the betterment of society.

## Our Mission

Vels University endeavours to provide relevant academic programs of theory & practical-oriented knowledge in order to empower the students to achieve professional and personal success in today's competitive, diverse and dynamic society by providing excellent research-support facilities, coaching by experienced faculty, excellent infrastructure, and collaborative research; fostering a culture of assessment, accountability, academic integrity and life-long learning.

## Quality Assurance

Vels University has established a system of Quality Assurance to monitor and enhance the quality of education. Quality Advisory Committee and Internal Quality Assurance Cell are constantly working towards this goal.



# வேல்ஸ்

## அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்

(DEEMED TO BE UNIVERSITY Estd., u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்றிதழ் 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம், சென்னை, இந்தியா



**டாக்டர் ஐசரி கே.கணேஷ்** எம்.காம்., எம்.பி.ஏ., எம்.எல்., பிஎச்.டி.,

நிறுவனர் – வேந்தர்

### *ஊக்கச் சிறகால் விண்ணைக் கடப்போம்...!*

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு"

என மனித குல மேம்பாட்டுக்கு வழி சொன்ன உலகப் பொதுமைப் புலவர் வள்ளுவச் சான்றோரின் குறள் வாக்கு நம் அனைவரின் வாழ்வாக நாளும் மலர்தல் வேண்டும்! வளரும் இளம் மாணவச் செல்வங்கள் இன்றைய உலகின் தேவைக்கு ஏற்பப் புதுப்புது உச்சங்களை எட்டுவற்குத் தளர்விலா ஊக்கத்தோடு புத்தெழுச்சிச் செல்வங்களாக வெளிப்படுதல் வேண்டும்! இதுவே இன்றைய தலையாய தேவையாகும்!

இன்றைய இத்தேவையை எதிர்கொள்ளும் வகையில் தங்களின் பல்துறைத் திறனை – ஆற்றலை அடையாளப்படுத்தும் வண்ணம் வேல்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள் ஒருங்கிணைந்து, 'வேல்சு சிறகு' என்னும் இதழினை அறு திங்கள் இதழாகத் தொடர்ந்து வெளியிட்டு வருவது பெரிதும் பாராட்டி மகிழ்வதற்குரியது! மனித மனத்தின் கலை உணர்வும் கற்பனை வளமும், உன்னதக் கனவுகளும்தான் வியக்கத்தக்க இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கும் வாழ்வு மேம்பாட்டிற்கும் ஊற்றுக் கண்களாகும்! இதுவே விண்ணைக் கடந்து வெண்ணிலவில் கால்பதிக்க எண்ணும் இன்றைய இந்தியச் சிந்தனையாக மலர்ந்துள்ளது! இவ்வகையில் நம் வேல்ஸ் மாணவ மணிகளின் படைப்பாற்றல் திறனுக்கான அரிச்சுவடியாக அமைந்திடும் சிறப்புக்குரியது 'வேல்சு சிறகு' எனும் நம் வேல்ஸ் மாணவ இதழ்...! இதனைத் தொடர்ந்து பரவலாக்கி முன்னெடுத்துச் செல்லும் உங்களின் இனிய ஆக்க நிலை முயற்சி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது...! இதற்கு என் இனிய வாழ்த்துகள்!

நம் வேல்ஸ் மாணவ பிரம்மாக்களின் படைப்பாற்றலை – கலைத் திறனை – அறிவியல் ஆற்றலைத் தக்க வகையில் கண்டறிந்து ஆற்றுப்படுத்தி, அவர்களை அவையத்து முந்தி இருக்கும் வகையில் இளஞ்செல்வங்களுக்கு நல்லதோர் அறிமுகம் தந்திடும் பொறுப்பை 'வேல்சு சிறகு' வாயிலாக நம் தமிழ்த்துறை சிறப்புடன் தாங்கி நிற்கின்றது! வேல்ஸ் தமிழ்த் துறைச் சங்கப் பலகைக்கு – பேராசிரிய நண்பர்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

வெள்ளி விழாவைக் கடந்த வெற்றிப் பயணத்தில் நம் வேல்ஸ் கல்விக் குழுமமும் முத்தான பத்தாண்டுகளைக் கடந்த சாதனைப் பயணத்தில் நம் வேல்ஸ் பல்கலைக்கழகமும் இனிதே தடம் பதித்துள்ளன! இந்திய அளவிலான தேசியத் தர மதிப்பீட்டில் கிரேடு 'ஏ' என்னும் உயர் நிலையைப் பெற்று, முன்மாதிரிப் பல்கலைக்கழகமென நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் இன்று பெருமிதம் கண்டுள்ளது! நம் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சி முழுமையை எய்தியுள்ள இவ்வேளையில், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மேதகு வெங்கைய நாயுடு அவர்கள் நம் பட்டமளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினராக வருகைதந்து பெருமைப்படுத்தியிருப்பது, வேல்ஸ் பல்கலைக்கழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நன்றிக்கும் மகிழ்ச்சிக்குமுரிய உன்னத நிகழ்வாகும்! நம் வேல்ஸ் கல்விக் குழுமத்தின் புது உதயமாக அலைகடலுக்கு அப்பால் இலண்டனில் கேம்பிரிட்ஜ் டியூட்டர்ஸ் காலேஜ், சிங்கப்பூரில் கிண்டில் கிட்ஸ் பன்னாட்டுப் பள்ளி ஆகியன அண்மையில் மலர்ந்துள்ளன! இப்படி அடுக்கடுக்கான பசுமைப் பக்கங்கள் பல என் மனத்திரையில் கட்சியாகி இனிமை சேர்த்து நிற்கின்றன. உங்கள் அனைவரின் ஓயா உழைப்பும் ஒத்துழைப்புமே இவை அனைத்தையும் சாத்தியப்படுத்தியுள்ளன என்பதை எண்ணி மகிழ்கின்றேன்!.

வேல்ஸ் குடும்பத் திருநாளில் – என் பிறந்த நாளில் உங்கள் ஒவ்வொருவருக்கும் என் உளம் நிறைந்த அன்பை உரியதாக்குகின்றேன்! வழக்கும் போல் இந்த ஆண்டும் 07.10.2019 அன்று வேல்ஸ் – குடும்பத் திருநாள் சிறப்பிதழாக வேல்சு சிறகு தம் மாணவச் சிறகு விரித்துப் பறப்பது குறித்து மிக்க உவகை கொள்கிறேன்! வேல்சு சிறகுக்குப் பாராட்டுகள்...! வேல்ஸ் குடும்பத் திருநாளுக்கு என் இதய வாழ்த்துகள்...!!

**(ஐசரி கே.கணேஷ்)**

வேல்ஸ் பல்கலைக்கழகம்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

**மாணவ இதழ்**

புரவலர்
கல்வித் திருமகன்
முனைவர் **ஐசரி கே. கணேஷ்**
நிறுவனர்– வேந்தர்

காப்பாளர்
பேராசிரியர் **ஆ. ஜோதி முருகன்**
துணைத்தலைவர்

மாணவப் பதிப்பாசிரியர் குழு

**க.ஆறுமுகத்தாய்** V சட்டவியல், **ஏ.கே. சக்தி** III பொருளியல் **பி. சாய் ருத்ரா** III கணினி அறிவியல், **இரா. அஜெய்ராஜ்** III காட்சித் தொடர்பியல்,
**க. நித்திய கல்யாணி** I உயிரிவேதியியல், **இர. பிரகாஷ்** I காட்சித் தொடர்பியல், **எம். ஐஸ்வர்யா** II தகவல் தொழில் நுட்பம் **த. பாலாஜி** I உயிரி கணினியியல்,
**வி. ஹேமலதா** III பயன்பாட்டுக் கணினியியல் , **ந.ரிஸ்வானா யாஸ்மீன்** III வணிக மேலாண்மை **அஷ்மிதா** III வரைகலை,
**கோ. தங்கராஜ்** III வணிகவியல், **ஸ்ரீ.பரமகல்யாணி** III உயிரித் தொழில் நுட்பம், **பி. அரவிந்தன்** III வரைகலை, **மீரா** III ஆங்கில இலக்கியம்,
**ரா.கீதா** I நுண் உயிரியல், **தாரணி** I உயிர் வேதியியல், **க.பவித்ரா** I வணிகவியல், **பி.ஸ்ரீகவி ரஷிணி** I இயற்பியல்,
**த.விக்ரம்** I கணினிப் பயன்பாட்டியல், **சிவா** I வணிக நிர்வாகவியல்

**சிறப்பாசிரியர்**
பேராசிரியர் **ப. மகாலிங்கம்**
புலமுதல்வர், மொழிகள் புலம்

**பொறுப்பாசிரியர்**
திரு. **ரா.ராஜா**
உதவிப் பேராசிரியர்

**பதிப்புச் செயன்மையர்**
முனைவர் **வெ. சிவசங்கர்**
தமிழ்த்துறைத் தலைவர்

**பதிப்பு நெறிமையர்**
முனைவர் **பெ. மோகன்**
இணைப் பேராசிரியர்

**பதிப்பு ஆற்றுப்படுத்துநர்**
முனைவர் **க. கமலா**
இணைப்பேராசிரியர்

முனைவர் **ம. பிரபாகரன்**
உதவிப் பேராசிரியர்

முனைவர் **சி. கமலக்கண்ணன்**
உதவிப் பேராசிரியர்

திரு. பொ.குபேந்திரன், முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்,
முனைவர் வே. கண்ணதாசன், முனைவர் தே. தேன்மொழி,
முனைவர் சி. மார்கண்டன், முனைவர் அ. இருதயராஜ், முனைவர் எ. பச்சையப்பன்,
முனைவர். ம. பிரகாஷ், முனைவர். என். தீபாராணி, முனைவர். எஸ். பிரியா,
முனைவர் கி. துர்காதேவி, முனைவர். யு. துர்காதேவி, முனைவர் பி.மஞ்சுளா, முனைவர் சு.சாந்தி
உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை

வெளியீடு:
**தமிழ்த்துறை – மொழிகள் புலம்,**
**வேல்ஸ் அறிவியல் தொழி நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**பல்லாவரம், சென்னை–600 117**
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

சிறகு : 5

இறகு : 8

வேல்ஸ் பல்கலைக்கழகம்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

07, அக்டோபர் 2019

# இதழ் பேசுகிறது...

**மாணவ இதழ்**

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின்– வேல்ஸ் குடும்பத்தின் மாணவ இதழாக உங்கள் "வேல்சு சிறகு" உங்களை நோக்கிச் சிறகு விரித்து வருகிறது...! பாசமும் பசுமையும் தழைக்க வருகிறது...! மொழிகள் புலத்துத் தமிழ்த் துறையின் வெளியீடாக– இக்கல்வி ஆண்டின் முதல் பருவ வெளியீடாக உங்களின் சிந்தைக் கரங்களில் தவழ்ந்திட இதோ வருகின்றது...

வேல்ஸ் கல்விக் குழுமம், மகிழ்ச்சியின் உச்சத்தில் பெருமிதத்துடன் கொண்டாடுகின்ற திருநாள் வேல்ஸ் குடும்பத் திருநாள்' – நம் வேந்தர் அவர்களின் பிறந்த பொன்னாள்...! வேல்ஸ் வானத்தின் வண்ணமயமான இந்தக் கொண்டாட்டத்தின் அடையாளமாக வேல்ஸ் குடும்பத் திருநாளினைப் போற்றிடும் வகையில் "வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழாக" விரிக்கப்படும் சிறகு இது...

இன்று நம் இந்திய நாடு தொடர்ச்சியான பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது. புதுமை படைத்தல், விண்வெளித் தொழில் நுட்பம், வளங்களைப் பாதுகாத்தல் போன்ற எண்ணற்ற துறைகளில் அரிய பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. உலகிலேயே மிக அதிகமான இளைஞர்களைக் கொண்டிருக்கும் நாடு நம் இந்தியா என்ற சாதகத்தைக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நம் வேல்ஸ் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் வேல்ஸ் மாணவ இளைஞர்களின் படைப்பாளுமையையும் அறிவாற்றல் சிந்தனைகளையும் வெளிக் கொணரும் நோக்கில் அக்டோபர் 2015 முதல் நம் வேல்ஸ் மொழிகள் புலத்துத் தமிழ்த்துறையின் வெளியீடாக மாணவ இதழாக வேல்சு சிறகு இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அவ்வகையில் மாணவர்களின் உலகளாவிய பார்வைகளையும் சமுதாய போக்குகளையும் இச்சமூகத்தில் தங்களை ஈடுபடுத்தி அறம் சார்ந்த செயல்களைச் செய்யத் துடிக்கும் நம் மாணவர்களின் ஆக்கத் திறன்களே சிறந்த படைப்புகளாக இதழில் வெளிப்பட்டு நிற்கின்றன என்பதை நாம் அறிலாம்.

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியால் இன்று உலகமே உள்ளங்கையில் என்ற நிலையில் உடனுக்குடன் உலகளாவிய செய்கிளை சமூக ஊடகங்கள் வழி நம் இளைஞர்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்விஞ்ஞான நவீன யுகத்தில் நம் இந்தியச் சமூகத்தின் மீதான பார்வைகளையும் அவர்கள்தம் அக்கறைகளையும் இவ்விதழின் வழி நம் மாணவ இளைஞர்களின் படைப்புகளின் எழுச்சி மிக்க கட்டுரைகளின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இத்தகைய படைப்பாளுமைகளை மாணவர்கள் வெளிப்படுத்த இடமின்றி, ஊக்குவிக்கப்போர் இன்றித் தமக்குள் போட்டுப் புதைத்து வைத்திருந்த பெருநிதியத்தையெல்லாம் தோண்டியெடுப்பதற்கான களமாக வேல்சு இதழ் அமைகின்றது. மேன்மேலும் இவை போன்ற பல படைப்புகளை இனி வரும் காலங்களில் நம் மாணவர்கள் வெளிப்படுத்தல் வேண்டும்; அதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கிலேயே வேல்சு இதழ் தொடர்ந்து சிறகடித்துக் கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை !

இத்தகைய சிறப்பு மிக்க மாணவர்களை உருவாக்கி அவர்களைச் சாதனை மனிதர்களாகச் சரித்திர நாயகர்களாக வளர்த்தெடுப்பதே நம் வேல்ஸ் பல்கலைகழகத்தின் தலையாய நோக்கமாகும் என்பதை உயிர் மூச்சாக கொண்டு விளங்கும் நம் வேல்ஸ் வேந்தர் அவர்களுக்கு நம் மாணவர்கள் என்றென்றும் நன்றி கடன் பட்டவர்கள் ஆவர்.

வெள்ளி விழாவைக் கடந்து இருபத்து ஏழாம் ஆண்டில் வெற்றி நடை போடும் வேல்ஸ் குழுமத்துக் கல்விப் பயணத்தில் சரித்திரச் சுவடு பதித்த உன்னத நிகழ்வு– இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் **மேதகு வெங்கைய நாயுடு** அவர்களின் மேன்மை தாங்கிய வரவு...! வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவினுக்கு மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து நம் மாண்பமை வேல்ஸ் வேந்தர் அவர்களோடும், மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற கல்வியாளர்களுடனும் பங்கேற்று அணி செய்த கருத்துக்கினிய காட்சி, இந்த வேல்சு சிறகின் முகப்பு அட்டையின் ஒளிப்படமாக இங்கு எழில் சேர்த்துள்ளது !

கலைத் திறன்கள் பலவற்றைத் துடிப்போடும் புதுமைப் போக்கோடும் அள்ளித் தந்துள்ள வேல்ஸ் மாணவ மாணவியச் செல்வங்கள் உள்ளிட்டோரின் எண்ணத்து மலர்ச்சி இந்தச் 'சிறகு' முழுவதிலும் வண்ணம் கூட்டியுள்ளன! அவை கவிதை, கட்டுரை, துணுக்கு, ஓவியப் படைப்புகளாக அழகு கொஞ்சிட உங்களை நோக்கி அணிவகுத்து வருகின்றன...!

உச்சங்களைத் தொட்டிடும் வானச் சிந்தனையோடு இலக்கு நோக்கிய திசையில் பறக்கத் தொடங்கிடும் நம்பிக்கைச் சிறகு இது...! மரபு மாண்புகளில் கால் பதித்துப் புதுமை வெளியில் மாணவ ஆளுமை விரித்துச் சிலிர்த்தெழுந்திடும் சிறகு இது...! சமூக நீதி மின்னும் புதுமை வானில் பறந்திடும் சிறகு இது...! இதோ புறப்படுகிறது 'வேல்சு சிறகு'...! அனைவரும் வாருங்கள்...! வாருங்கள்...! உடன் இணைந்து சிறகு விரிப்போம்! விண்ணையும் கடந்து மேலே.... மேலே... எனப் பறந்திடுவோம்...! வென்றிடுவோம்...!!

சிறகு விரிப்பில் உங்களுடன்,

**ரா.ராஜா**

பொறுப்பாசிரியர் – வேல்சு சிறகு



# வேல்ஸ் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடல்


பேராசிரியர் **ப.மகாலிங்கம்**
புலமுதல்வர், மொழிகள் புலம்
வேல்ஸ் பல்கலைக்கழகம்


ஆர்த்திடும் அலைகடல் ஞானத் திருக்கோயில் வாழிய வாழியவே!
கீர்த்திமிகு நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் வாழிய வாழியவே!

ஆயிரம் ஆயிரம் பல்திசை மாணவர் நாடி
ஆளுமை பெற்றிடும் சங்கமச் சமுத்திரம்!
பாயிரப் புகழ் மைந்தர் கணேச வள்ளல்தம்
தந்தை வேலனார் நினைவில் நிமிர்ந்த கல்வி இமயம்!
வாழிய வாழியவே!

பன்னோக்கில் மின்னேர் பொறியியல் மருத்துவம் சட்டம் வணிகம்
அறிவியல் ஆய்வு எனவளர்
கல்வி நூறெனை அணிசெயப் புதுமைக் கனிந்திடும்
வேல்ஸ் பல்கலைக்கழகம்!
பன்னாடும் பாரதமும் தமிழ்நாடும் இருபால் மாணவத்தால்
இணைந்து நிற்க மண்ணில் தெரியுது வேல்ஸ் வானம்!
வாழிய வாழியவே!
சமநீதி சமூகநீதி மனிதம் போற்றும் மூச்சுக் காற்றால்
சாதனை படைக்கும் நம்பிக்கைப் பூஞ்சோலை!
வாழிய வாழியவே!

அன்னை வேல்ஸ் வளர்த்த மாணவச் செல்வங்கள்
சமுதாய வானமெங்கும் மின்னும் நட்சத்திரங்கள்!
மேன்மை விளைத்திடும் வேல்ஸ் எனும் பல்கலைக் குடும்பம்
கால்கொண்டதுவோ சென்னைப் பல்லாவரத்தில்!
புத்தெழில் தாழம்பூரில் மணம் பரப்பிப் புது உதயத் தெலுங்கானாவில்
படர்ந்தோங்கி,
நானிலம் போற்றிட இந்தியமாக வளரக் காண்போம்!
வளரக் காண்போம்!
நித்தமும் புதிதாய்ப் பிறந்திடும்
நித்தமும் புதிதாய் வளர்ந்திடும்
வித்தக மாணவர் அறிவு எழுச்சியின்
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!!





# கீழடியை நோக்கி...!

ஆர். ஞானசுகன்யா
III மின்பொறியியல்

- கீழடி மதுரையின் அருகே உள்ள சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள பழைமையான ஊராகும்.
- கீழடி வைகை நதிக்கரையின் நாகரிகத்தைத் தன்னுள்ளே ஏந்தியுள்ளது.
- அங்கே கிடைத்த பொருட்களும், செய்திகளும் இந்திய வரலாற்றையே தெற்கிலிருந்து மாற்றி அமைக்கும் வகையில் அமைந்தது.
- தற்போது நடத்திய நான்காம் கட்ட ஆய்வின் முடிவில்....!
- கீழடியில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் தமிழரின் தொன்மையைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது.
- நம் நாகரிகம் கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதாவது நாம் இன்று வாழும் காலத்திலிருந்து 2600 வருடம் பழைமையானது.
- கீழடியில் நடத்திய ஆய்வின் படி, தமிழ் பிராமி எழுத்துகள் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலேயே தோன்றி விட்டது.

**கீழடியில் கிடைத்தவை**

கட்டடப் பகுதிகள், எலும்பால் ஆன அம்பு, பலவகையான மணிகள், சங்கால் ஆன வளையல்கள், பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானைகள், இங்கே கால்நடையின் எலும்புகள் கிடைத்துள்ளன. எனவே இங்கு வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலையே பிரதானமாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

- நம் சமூகம் எழுத்தறிவு பெற்ற சமூகம்
- பொருளாதாரத்தில் வளமையான சமூகம்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகர்களுடன் வணிகத் தொடர்பு, இன்னும் பல...

**பானை ஓடுகளில் பெயர்கள்...!**

பானை ஓடுகளில் பெயர்கள் பொறிக்கப்பட்டதில் இருவகையான முக்கியத்துவம் அமைந்துள்ளது.

மேலும் பொறிக்கப்பட்ட இந்தப் பெயர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- பானை செய்யும் போது எழுதியவை
- பானை சுடப்பட்டப்பின் எழுதியவை

இவற்றுள் பானை சுட்டபின் எழுதியவையே பெரும்பான்மையாகக் கிடைத்துள்ளன. இதன் மூலம் பானை உபயோகித்தவர்கள் அனைவருமே படிப்பறிவு கொண்டவர்களாக இருந்துள்ளனர். அதாவது நம் மக்கள் அனைவருமே படிப்பறிவில் சிறந்துள்ளனர் என்பது புலனாகிறது.

**சமயம் அல்லாதவர்கள்..**

கீழடியில் கிடைத்த பொருட்களில் ஒன்று கூட மதங்களையும் சமயங்களையும் சார்ந்தவாறு கண்டெடுக்கப்படவில்லை.

எனவே தமிழர்கள் மத, சமய பேதமின்றி வாழ்ந்தவர்கள் என்பது புலனாகிறது.

ஆதலால், கீழடியில் கிடைத்த ஆதாரங்களும், செய்திகளும், பொருட்களும் 'கீழடித் தமிழர்களின் தாய்மடி' என்பதனை உணர்த்துகிறது.

தமிழனென்று சொல்லடா... தலை நிமிர்ந்து நில்லடா...
தமிழ் உள்ளவரை நம் இனம் வாழும்...!

# சுக உதை சோகமாச்சுதே...

வ. மகாலட்சுமி
கல்வியியல் துறை இரண்டாம் ஆண்டு,



மூவுலகிலும்
தாயைப் போல்
தெய்வம்
வேறெங்குமில்லை!

கருவில் உனை
சுமக்க
நீ உதைக்கையில்
ஆனந்தத்தில்
வலியையும்
சொர்க்கமென
கொண்டாள்!

காலம் பல கடந்து
உனக்குப் பல
கழுதை வயதாக– அன்று
நீ உதைக்கையில்
அனாதையில்லமே
சுகம் என்று
சென்று
கல்லறையிலே
சொர்க்கம் கண்டாள்!

# "நாளைய உலகம் இளைஞர்கள் கையில்"

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் "பாரத நாடு" என்பது பாரதியின் வாக்கு" அந்தப் பாரும், இந்தப் பாரதமும் வாழ வேண்டுமானால் அது இளைஞர்கள் கையில் உள்ளது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

**செ.உமாமகேஸ்வரி**
**இளம் வணிகவியல்**
**முதலாம் ஆண்டு**

"எழுந்து நடந்தால் இமயமலையும் நமக்கு வழி
கொடுக்கும். உறங்கிக்கிடந்தால் சிலந்தி
வலையும் நம்மைச் சிறை பிடிக்கும்" என்பதை மறந்துவிட வேண்டாம். 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இளைஞர்களுக்கு என்பதை அன்று சுதந்திரம் மட்டுமே தேவைப்பட்டது. ஆனால் இன்றோ நாடு எங்கே சென்று கொண்டு இருக்கிறது? பாரதி, பகத்சிங், கட்டபொம்மன், பட்டேல் போன்றவர்கள் பட்டியலில் நீங்களும் தடம் பதிக்க வேண்டும்.

"தான் கெட்டது மட்டுமல்லாமல் தன் வனத்தையும் சேர்த்துக் கெடுத்ததாம் குரங்கு" என்பது போல ஒரு கூட்டத்தில் ஒருவன் தவறு செய்தால் அது அந்தக் கூட்டத்தயே பாதிக்கும் என்பது தான் உண்மை.

பாரதி கண்ட கனவு, கலாம் காணச் சொன்ன கனவு இரண்டையும் நனவாக்கும் ஆற்றல் இளைஞர்களுக்கு உண்டு என்பதை நிருபிப்பாயா இளைஞனே?

"நீ போராடினால் போராளி ஆவாய்

பயந்து ஓடினால் ஏமாளி ஆவாய்" என்று மறந்து போகாதே நண்பா! வீழ்ந்தாலும் நீரைப் போல வீழ்" எழுந்தால் நெருப்பை போல எழு" நீர் வீழ்ச்சியில் மின்சாரம் எடுக்க முடியும். நெருப்பின் எழுச்சியில் தீபம் ஏற்றமுடியும். "ஜல்லிக்கட்டுக்குத் தந்த அர்ப்பணிப்பை தன் "குடிஉயரவும் கோல் உயரவும்" தாருங்கள் தரணி போற்றும்" நண்பா

"மலையை பார்த்து மலைத்து விடாதே
மலை மீது ஏறினால் அதுவும் உன் கால் அடியில் என்று மறந்துவிடாதே"

விவேகானந்தர் சொற்படி வாழ்க்கை வாழ மூன்று வழிகள் உண்டு அதுவே உணர்வதற்கான இதயம், சிந்தனைத் திறனுள்ள மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் நண்பா வெறுங்கை என்பது மூடத்தனம் உன் விரல்கள் பத்தும் மூலதனம் நண்பா, எழுந்து வா ஒரு அலை போல நெடுந்தூரம் சென்றிடுவோம் வாழ்வின் வெற்றியைத் தேடி, "என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் சோர்ந்து போகாதே காரணம் நீ 100 வெற்றிகளைப் பார்க்கப் போவதில்லை 100 தோல்விகளைப் பார்க்கப் போகிறாய் நண்பா! சோர்ந்து விடாதே. எந்தநிலை வந்தாலும் வந்த நிலையை மறவாதே அறிவுகண்டு ஆளுவோம்; மேரி கோம் போல ஓடுவோம்; உசேன் போல்ட் போல எல்லாம் நமக்குச் சாத்தியம் தான் என்பதை உணருங்கள். வாழ்வில் உயருங்கள். சினிமா சமூக ஊடகங்கள் எல்லாம் பொழுது போக்கே தவிர உன் போக்கு அல்ல. விழித்து எழு வெற்றி உனதே என்பதை உணர்ந்து. கையில் ஆயுதம் எடு மருத்துவனாய் இருந்தால், மண்ணை எடு உழவனாய் இருந்தால், உணர்வோடும், உயிரோடும் இருக்கும் நீயும் பயிரே! ஆம் ஆயிரங்காலத்துப் பயிர். உன்னை நீயே விவசாயம் செய்துகொள், வெற்றியோடு நாளைய உலகமும் உங்கள் கையில் என்பது உறுதி இளைஞா!

"உரிமையாய் குரல் கொடு ஏனெனில் இந்தச்
சமூகம் உனக்கு உரியது"
"தீயவற்றைத் தட்டிக் கேள் காரணம் அதற்கு
பாதிப்படையப் போவது உன் அடுத்த தலைமுறை"
என்பதைப் பசு மரத்தாணி போல் மனதில் வைத்து"

"உன் அறிவால் பட்டொளி வீசி பறந்து வா இவ்வுலகில், ஏனெனில் நாளைய உலகம் உன் கையில்!

## பெண்ணின் கண்ணீர்

செ. உமாமகேஸ்வரி
இளங்கலை வணிகவியல்

கருவறையில் அழுதாலோ நான் அறியேன்
பிறப்பறையில் அழ தொடங்கியவள்!
பாலுக்கு அழுது படிப்புக்கும் அழுதாள்
பெற்ற பிள்ளைகளை கரை சேர்க்கக் காலமும் அழுதாள்
சாதிக்கப் பிறந்தவளாயிருந்தாளும் (பெண்) சாதி
பெயரைச் சொல்லிச் சாகடிக்கும் கூட்டம் கண்டு
நித்தம் அழுதாலே நிம்மதி துலைத்தாளோ?
சுத்தமில்லாமல் மனதில் செத்துத்தான் போனாளே!
பேதனை கூட்டம் அன்று பூட்டி வைத்தது
போதனை கூட்டம் இன்று ஆட்டி வைக்கிறது.
கூண்டுக் கிளியை அவிழ்த்துப் பறக்க விட்டு
சுட்டு தின்பது போல்,
பெண் சுதந்திரம் என்று பெயரிட்டு
ஆட்சி செய்கிறது ஆண் சமூகம்
என்றும் பெண்ணுக்கு எஞ்சுவது கண்ணீர் மட்டும்.

## உயிர்

நிமினி .க
முதுஅறிவியல் வேதியியல்
இரண்டாம் ஆண்டு

அகத்தால் இணைந்த நாம்
ஆத்திரத்தால் பிரிந்ததேனோ?
இனிப்பாக இருந்த என்னை
ஈயாக மொய்த்த தேனோ?
உறுதியான எனது பேச்சை
ஊமை ஆக்கியதேனோ?
என்றும் உனை சேர்வேன்
ஏற்க மறுப்ப தேனோ?
ஐயம் மனதில் எழுந்தால்
ஒருமுறை என்னிடம் பேசு
ஓசையுடன் காதலை வீசு
ஔவியம் இன்றி வாழ்வோம்

# சங்கப்பதுமை



**எல்.அபினேஷ்**
I பி.எஸ்சி. கணினி அறிவியல்

# வேல்ஸ் திருநாள்

முனைவர் **சு. ஜெயக்குமாரி**
தலைவர்
மருந்தாக்கியல் துறை

பாருக்கு ஒரு நாள் சுதந்திர திருநாள்
பல்லாவரத்துக்கு ஒரு நாள் வேல்ஸ் திருநாள்!

தமிழருக்கு ஒரு நாள் உழவர் திருநாள்– எங்கள்
வேல்ஸ் வேந்தருக்கு ஒரு நாள் வேல்ஸ் திருநாள்!

அறுவடைத் திருநாளாம் பொங்கல் திருநாள்
அறுசுவைப் படைக்கும் திருநாளாம் எங்கள் வேல்ஸ் திருநாள்!

பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தாடுவோம் தீபத்திருவிழாவில்
பட்டாடை உடுத்தி மகிழ்ந்தாடிடுவோம் இந்த வேல்ஸ் திருவிழாவில்!

கரும்புக்கு ஒருவிழா பொங்கல் விழா
களிப்புக்கு ஒருவிழா இவ்வேல்ஸ் குடும்ப விழா!

அலைஅலையாய் வரும் ஆற்றுவெள்ளம் காவிரித்திருநாளிலே
அலைஅலையாய் வரும் மக்கள் வெள்ளம் வேல்ஸ் திருநாளிலே!

கம்சனின் அறியாமை அழிக்கும் நன்னாள்– கிருஷ்ண பகவானின்
பிறந்தநாள்
கல்வி அறிவை வளர்க்கும் நன்னாள்– எங்கள் வேந்தர்
"ஐசரி கணேசனின்" பிறந்த நாள்!
இவ்வுலகில் அதிசயமோ ஏழு
தெய்வக்கன்னிகைகள் ஏழு
சப்தஸ்வரங்கள் ஏழு
சப்தரிஷிகளும் ஏழு
வார நாட்களோ ஏழு
வானவில்லின் வண்ணமும் ஏழு– வான்முட்டும்
சிறப்புப்பெற்ற இவ்வேழு என்னும் எண்
வேந்தரின் பிறந்தநாளாகி மேலும் சிறப்புற்றதனால்
மகிழ்ச்சி பொங்கும் இத்திருநாளை,
மறக்க முடியாத வேல்ஸ் திருவிழாவை,
ஏழேழு ஜென்மத்துக்கும் விழாவெடுத்து
எட்டுத்திக்கும் அவர் புகழ் மணக்கக் கொண்டாடிவோம்!
வாழ்க வேல்ஸ் நாயகன்! வளர்க வேல்ஸ் குழுமம்!

# கல்வி வேந்தர்

செந்தில்குமார் ஜெனகன்
உதவிப் பேராசிரியர்
பொறியியல் (கணினி) துறை

ஐயமின்றி உதவினீர்
சர்க்கரைப் போல் இனித்தீர்
பரிசுகள் பல பெற்றீர்
கணக்கில்லை நீர் செய்தவை
கணேசக் கடவுளைப் போல் நீர் காட்சியளித்து,
சவால்களை நீர் சாதகமாக்கி கொள்கின்றீர்
என்னவென்றுச் சொல்வேன் உம் செயல்களை, முடிவில்லை...
இனித்தபுவி மனிதரிலே மிக்குயர்ந்த மனிதரெல்லாம்
சகமக்கள் மிக்குயர் இலகுவது இல்லை-காண்பேன்!
அழகியவாம் அவ்வெண்ணம் சேகரித்த உருவம் கண்டேன்!
இவ்விடத்தில் அமுதமெல்லாம் இனிதினிதாய்
குவிந்திருக்க அவ்விடத்தின் தலைவன்
நீங்கள் என்பது-கண்டேன்!
நாலைந்து துருவம் சென்றேன் நான் அதைச் சொல்ல
வலியோர் வாக்காலும் உலகில் அளியோறும்
உந்தப்பற்றும் உணர்வு-கண்டேன்!
எத்திக்கும் எழுச்சி கொண்ட இயல்நடை
பண்புமிக்க மானுடப் பிறப்பு-கண்டேன்!
யாவரும் நலம் விரும்பும் சமூகமே நீங்கள்
குறித்தபடி செய்வதும் வைத்திடும் நம்பிக்கை கண்டேன்!
தரம் விளைக்கும் உயர்கல்வி தந்தவரும் நீங்கள்!
தழைக்கும் தலைமுறைகள் தந்தவரும் நீங்கள்!
பதிந்துவிட்ட மாமனிதப் பண்பாளர் நீங்கள்!
வாழ்வென்றே கடல் ஆழச் செல்வர் நீங்கள்!
அன்பிலே அறம் செய்யும் நல்லவர் நீங்கள்!
வானுயறப் புகழ் பரவ வாழ்த்துகிறேன்!

# மரம்

ஜெ.ரம்யா
இளம்அறிவியல் கணிதம்
மூன்றாம் ஆண்டு



நீர்....
கொள்ளையடிக்கப்பட்ட காலத்தில்
தாகத்தில் தவித்தேன்....
காற்று வீசும்பொழுதும்
கார்மேகம் சூழும்பொழுதும்,
ஏக்கத்துடன் வானத்தைப் பார்த்தேன்...
உயிர் பயத்தில் அல்ல...
மழையிலும் வெயிலிலும் நீ ஒதுங்கவும்,
தூய்மையை நீ சுவாசிக்கவும்
நான் இருக்கிறேன் என்று சொல்லவே...

# என் இந்திய தேசமே!



**எம்.ஜெயக்குமார்**

II பி.சி.ஏ., ஆ பிரிவு

# பெண்கல்வி மகளிர் முன்னேற்றம்



இரா.மகேஸ்வரி
உயிரித்தொழில் நுட்பவியல்
மூன்றாம் ஆண்டு

முன்னுரை:

"மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா" என்று கவிமணி அவர்கள் பெண்களின் பிறப்பினை விழுமிய பிறப்பு என்பார். இத்தகைய சிறப்புடைய பெண்டிர் சங்க காலத்தில் சீரோடும், சிறப்போடும் வாழ்ந்தனர். ஔவையார், காக்கை பாடினியார் போன்ற பெண்டிர் கற்பும் பொற்பும் பெற்றுத் திகழ்ந்தனர். கல்வி கற்று உயர்ந்தனர்.

இடைக்காலம்:

இடைக்காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் மகளிர் நிலை மாறியது. மகளிரை அடக்கி ஆளும் நிலை ஏற்பட்டது. அறிவும் ஆற்றலும் குறைந்தன சைவ, வைணவ, சமய மறுமலர்ச்சியால் மகளிர் முன்னேற்றம் மெதுவாக அரும்பத் தொடங்கியது.

பெண் கல்வி:

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்" என்று 20-ஆம் நூற்றாண்டில் மகளிர் முன்னேற்றம் தொடங்கியது." அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" என்னும் நிலை மாறியது. நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டு ஆணுக்குப் பெண் இங்கே சரி நிகர் சமானமாக வாழத் தொடங்கிவிட்டனர். மகளிர் கற்று, மருத்துவராகவும், ஆசிரியர்களாவும் ஆனார்கள்.

மகளிர் முன்னேற்றம்:

பெண் கல்வியை அடுத்து மாதர் முன்னேற்றத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன. அண்ணல் காந்தி அடிகள், இராஜாராம் மோகன்ராய், திரு.வி.க. பெரியார் ஈ.வே.ரா. போன்றோர் மகளிர் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டனர். உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடுத்தல், பலதார மணமறுப்பு முதலியவை முக்கியமானதாகும். இன்றைய அரசு மகளிர்க்கெனத் தனிப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் என வெவ்வேறு நிலைகளில் உருவாக்கிப் பெண் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

பெண் கல்வியின் நன்மைகள்:

பெண்கள் கல்வியறிவு பெற்று இருந்தால் தம் குழந்தைகட்குக் கல்வியறிவு ஊட்ட முடியும்; அறிவுள்ள பெண்மணி தன் குடும்பத்தைத் திறம்பட நடத்த முடியும். சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் மகளிர் இடம்பெற்றுக் கல்வி, மருத்துவம், சட்டம், பொறியியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கச் செய்வது பெண் கல்வியேயாகும்.
“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”

முடிவுரை:

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்
கொளுத்துவோம்” என்ற பாரதியின் மொழிப்படி மகளிர் இன்று பலவற்றிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். ஆடவரும் பெண்டிரை மதித்துப் போற்றின் அவர்கள் நிலை உயரும், நாடும் நலம் சிறக்கும்.

# முதியோர் இல்லம்

ப.லெட்சுமி பிரியா
சட்டத்துறை
மூன்றாம் ஆண்டு

பேரக்குழந்தைகளை அள்ளி அணைக்கக் கை விரித்த அவர்களை அள்ளி
அணைத்தது அணைக்கும் கரங்கள் மட்டுமே
வாயிற்கதவு கோவில் போல் இருந்தாலும் வருகை
தருவது தளர்ந்த கால்கள் மட்டுமே....
நிலாச்சோறு தந்த அன்னைக்கு ஒரு வாய் சோறும் கிட்டவில்லை
பிணி ஒவ்வாது காத்த தந்தைக்கு மருந்துப் பொருளும் கிட்டவில்லை
தவழ்ந்த குழந்தையை ரசித்த கண்கள்
கண்ணீரில் கசிந்தது, தனித்து நடக்கையில்
பகலும் இரவாகிப் போனது தனது பசுமைப்
பயிர்களை காணாது நிற்கையில்
இளங்கன்றை மரமாக்கிய பெற்றோர்
இன்று தனி மரமாய் வீதியிலே
அங்கே ஒவ்வொரு காலடியும் ஒரு கதை சொல்லும்
ஒவ்வொரு மணித்துளியும் ஒரு சோகம் சொல்லும்
இரக்கமற்ற பிள்ளைகளால் உறக்கமற்ற உன்னத உள்ளங்கள்
வாசல் நோக்கி காத்திருந்தது தன் மக்களை நோக்கி அல்ல,
தன் மரணத்தை நோக்கி ....!



பிள்ளைகளால் அனாதையான பெற்றோர்களை இறுதியில் தத்தெடுத்தது முதியோர் இல்லம்!

# வெல்க தமிழ்



**ஆர்.நிர்மல்**

**II ஏவியேஷன் ஆ பிரிவு**

# வான் பரப்பியல்

ஈ.அபினேஷ்
I பி.எஸ்சி. – ஏவியேஷன்

## (விமானப் போக்குவரத்து
## ( AVIATION )




ரைட் சகோதரர்கள்:

ரைட் சகோதரர்கள் என்றழைக்கப்படும். ஓர்வில் ரைட் (ஆகஸ்ட் 19, 1871-ஜனவரி 30, 1948) வில்பர் ரைட் (ஏப்ரல் 16, 1867-மே 30, 1912) என்ற இருவரும் அமெரிக்காவைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்களும் விமானத்தைக் கண்டறிந்த முன்னோடிகளாவர். முதன்முதலில் டிசம்பர் 17, 1903 ஆம் ஆண்டில் பன்னிரெண்டு வினாடிகள் எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர்கள். வட கரோலினாவின் கிட்டி ஹாக்கில் "ஓர்வில் ரைட்" 12 கு.வ. (H.P.) ஆற்றல் கொண்ட ரைட் பிளையர் எனும் பெட்ரோல் இயந்திரம் பூட்டிய வானூர்தியில் முதன்முதலாகப் பூமிக்கு மேல் 30 மைல்/மணி வேகத்தில் 12 வினாடிகள் 120 அடி தூரம் பறந்து புகழடைந்தார். (4) (5)(6)(7) 1904. 1905 ஆண்டுகளில் ரைட் சகோதரரின் பறக்கும் ஊர்தி பல முறையில் முற்போக்காகி மேன்மைப்படுத்தப்பட்டது.

முதல் விமானத் தொழில்நுட்பம்:

வானில் பல ஆண்டுகளாய்ப் பறக்க முயன்ற பல அறிஞர்கள் தோல்வியுற்ற போது, ரைட் சகோதரர்கள் பல்வேறு சோதனைகளுக்குப் பின் வெற்றி பெற்றதற்கு மூன்று தொழில்நுட்பங்கள் உதவின. முதன் முதலாக இயற்கை ஊர்திப் பரப்பியல் பயிற்சி முறையில் 'முன்னுந்தல்' (THRUST) 'மேலெழுச்சி' (LIFT) 'திசைதிருப்பி' (RUDDER) எனப்படும் 'முப்புற உந்தல் கட்டுப்பாடு' என்ற நுணுக்கத்தை ரைட் சகோதரர்கள் கையாண்டனர். ரைட் சகோதரர்கள் இரண்டாவது ஊர்திக்கு முன்னுந்தல் ஆற்றலைத் தருவதற்கு எண்ணெயில் இயங்கும் எரிபொருள் இயந்திரத்தைப் புகுத்தி அதிக வேகத்தை அளித்தனர். மூன்றாவதாக 1900-1903 ஆண்டுகளில் ஆர்வில் ரைட், வில் பர்ரைட் இருவரும் (WIND TUNNEL) ஒன்றைத் தயாரித்து 200 விதமான இறக்கைகளைச் சோதித்துத் தகுதியான ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர்.

இராணுவ விமானப் போக்குவரத்து
(A brial warfare)

18 ஆம் நூற்றாண்டு காலத்தில் எளிய பலூன்கள் மேற்பார்வைப் பணிகளுக்காக விமானமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆண்டுகள் செல்லச் செல்ல, அதிகரித்து வரும் திறன் மற்றும் தேவைகளுக்கு ஏற்ற வகையிலான இராணுவ விமானங்கள் உருவாக்கப்பட்டன.

**வகைகள்**

பிற விமானங்களை அழிப்பதே போர் விமானங்களின் பிரதான செயல்பாடாகும். (எ.கா. சாப்வ்வித் கேமல், A6M ஜீரோ, F-15, MTG-29-SU-27, F-22)

விசாரனை விமானங்கள், தேடுதல் பணிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. (எ.கா. ரம்ப்ளர், டாப், u-2, டிஹேவிலேண்ட் மஸ்கிட்டோ, MiG-25R)

எஹெலிகாப்டர்கள் தாக்குதல் (எ.கா. AH-64-Mi-24)

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு

(AIR TRAFFIC CONTROL)

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு (ATC) என்பது பிரிந்திருத்தலுக்குத் தேவையான தகவல் தொடர்பு முக்கியமானதாகும். அதாவது, கிடைமட்டத்திலும் செங்குத்துவாக்கிலும் மோதும் ஆபத்துகளைத் தவிர்க்கப் போதுமான அளவு தொலைவில் இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்.

பொதுவாக விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டில் நான்கு வெவ்வேறு வகைகள் உள்ளன.

- விமான நிலையங்களுக்கிடையே தடத்திலேயே விமானத்தைக் கட்டுப்படுத்தும் மையக் கட்டுப்பாட்டாளர்கள்.
- விமான நிலையத்தின் குறுகியத் தொலைவில் (வழக்கமாகக் கிடைமட்டத்தில் 10-15 கி.மீ. மற்றும் செங்குத்துவாக்கில் 1,000 மீ) விமானத்தை கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டு கோபுரங்கள் (கோபுரம், தரைக்கட்டுபாடு, இடம் வழங்கள் மற்றும் பிற சேவைகள்.
- பொதுவாக ரேடார் சாதனங்களைப் பயன்படுத்தாமலே கண்டங்களுக்கிடையே உள்ள சர்வதேச கடல்களின் மேலே விமானங்களைக் கட்டுப்படுத்தும் கடல் வழிக் கட்டுப்பாட்டாளர்கள்.
- பரபரப்பான விமான நிலையங்களில் பரந்த பகுதியில் (வழக்கமாக 50-80 கிமீ) விமானங்களைக் கட்டுப்படுத்தும் முனையக் கட்டுப்பாட்டாளர்கள்.

குறிப்பாக இன்ஸ்ட்ருமெண்ட் ஃப்ளைட் ரூட்ஸ் (IFR) விதிகளின்படி இயங்கும் விமானங்களுக்கு, விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடு மிக முக்கியமானதாகும். இதில் விமானிகள் எதிரே வரும் பிற விமானங்களைப் பார்க்க முடியாதபடி வானிலை நிலவலாம். இருப்பினும் அதிக போக்குவரத்து நெரிசலுள்ள பகுதிகளில், குறிப்பாக பெரிய விமான நிலையங்களில் “விசுவல் ஃப்ளைட் ரூட்ஸ்” (VFR) விதிகளின்படி இயங்கும் விமானங்களும் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டியது அவசியம்.

# அன்புள்ள ஆசிரியர்

எஸ். ஜெயஸ்ரீ
II பி.எஸ்.சி., பி.எட்.

அறிவு என்னும் விதையை விதைத்து
அன்பு என்னும் தண்ணீர் ஊற்றி
தீயஎண்ணம் என்னும் களையை எடுத்து
நற்குணம் என்னும் உரமளித்து
பெருமரம் என்னும் 'கல்வியுடையவரை'
உருவாக்கும் உன்னத பிறப்பே
ஆசிரியர்கள்!...

அன்பை ஊட்டும் போது "தாயாகவும்"
கண்டிக்கும் போது "தந்தையாகவும்"
தவறைச் சுட்டித்திருத்தும் "உறவினர்களாகவும்"
இன்பத்துடன் உறவாடும் போது "நண்பனாகவும்"
தேர்வறையில் "எதிரியாகவும்"
தேர்வின் முடிவுகள் கிட்டும் போது
"கடவுளாகவும்"... திகழும்
ஆசானே!...

என்னை மன்னியுங்கள்,
தங்களைக் கடவுளுடன் ஒப்புமைப்படுத்தியதற்கு
ஏனெனில், கடவுளுக்கு ஒருபடி மேலும்
தாய் தந்தையர்க்க ஒருபடி கீழும்
திகழ்கிறாய்!...

அள்ளிக் கொடுத்தால் தன்னிடம்
குறைந்துவிடுமோ என்று எண்ணாமல்
கல்வியை அள்ளி அள்ளிக்
கற்பிக்கும் சுயநலமற்ற
பொதுநலமுடையவரே ஆசிரியர்!...

நீ, ... மருவத்துவராக உருவாகலாம்
வக்கீலாக உருவாகலாம்
போலீஸாக உருவாகலாம்
ஏன்,
ஆசிரியராக கூட உருவாகலாம்
ஆனால்...
உன்னை உருவாக்குபவர்
"ஆசிரியர்களே"!...

ஆசிரியரே நான் உன்னை
நேசிக்க விரும்புகிறேன்!...
கற்கும் வரை அல்ல
கல்லறை வரை...
அன்பின் மூலம் மட்டுமல்ல
கல்வியின் மூலம்!...

# இன்றைய இந்தியா




எம்.சித்ரா
V பி.ஏ., எல்.எல்.பி.,

# ஆணவக்கொலைகளும் அதற்கான சட்டங்களும்




க. ஆறுமுகத்தாய்
சட்டவியல் - ஐந்தாம் ஆண்டு

*சமுதாயம் எந்த அளவிற்கு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கிறது. அதேபோல் ஆணவக் கொலைகளும் நாளுக்கு நாள் அதிகாரித்துக் கொண்டே தான் இருக்கிறதோ. கடந்த மூன்று ஆண்டகளில் 300 ஆணவக் கொலைகள் இந்தியாவில் நடந்துள்ளது. உத்திரப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் தென் இந்தியாவில் அதிகமாக நடந்துள்ளது. வெவ்வேறு சாதி, மதம் சார்ந்த இருவர் மணக்கும் போது அவர்கள் குடும்பத்தினரால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்த ஆணவக் கொலைகளுக்கு முக்கியமான காரணம் சாதிய அமைப்பு தன் நிலையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் தான். இந்த அச்சம் தான் பலரை இந்த கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபட வைக்கின்றது. இதற்கு சமுதாய அழுத்தமும் ஒரு முக்கிய காரணமாக சம மனிதர்கள் மத்தியில் அன்பு, இரக்கம், சகிப்புத்தன்மை இல்லாமல் போய்விடுகிறது. இதனால் பகுத்தறிவு திறன் என்பது குறைந்து கொண்டே தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 81 ஆணவக்கொலைகள் நடந்துள்ளன. இந்த ஆணவக் கொலைகளினால் பலியானவர்களின் வரிசையானது கோகுல்ராஜ், பிரணாய் என நீண்டு கொண்டேதான் இருக்கிறது.*

*அதற்கான சட்டங்கள்:*

*இந்த ஆணவக் கொலைகள் இந்திய தண்டனை சட்டம் 1860 கீழ் பதிவுசெய்யப்படுகிறது.*
*நந்திஷ், சுவாதி இந்த கௌவரக் கொலை கர்நாடகாவில் உள்ள மாண்டியா மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த வழக்கு பிரிவு 329, 201 இந்திய தண்டணை சட்டம் 1860 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பிரிவு 329:*

*சொத்துகளை கொள்ளையடிப்பதற்காக ((அ) ஒரு சட்டவிரோத நடவடிக்கையைத் தாமதப்படுத்துவதற்கு ஆகியவற்றிற்காக கொடூரமாக காயப்படுத்துதல்:*

*சொத்துக்களை வாங்குவதற்கு அல்லது ஒரு சட்டவிரோத நடவடிக்கையைத் தாமதப்படுத்துவதற்கு ஆகியவற்றிற்காக கொடூரமாக காயப்படுத்துதல் இந்த பிரிவின் தண்டனைக்குரிய குற்றமாகும். பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தே (அ) பாதிக்கப்பட்டவர்களிடம் ஆர்வமுள்ள எந்தவொரு நபரிடமிருந்தோ (அல்லது) பாதிக்கப்பட்டவருக்கு ஆர்வமுள்ள எந்தவொரு நபரும் சட்டவிரோதமானது (அ) குற்றம் செய்வதற்கான கமிஷனை எளிதாக்கும் இதற்கு எளிய அல்லது கடுமையான சிறை தண்டனையை பத்து ஆண்டுகள் வரை நீடிக்கலாம் மேலும் அபராதம் விதிக்கப்படும்.*

*பிரிவு 201:*

*ஒரு குற்றம் நடைபெற்றதை அறிகிறோம் (அல்லது) அதனைப்பற்றி அறியும் வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அந்த நிலையில் அந்தக் குற்றம் பற்றிய சாட்சியத்தை குற்றவாளிக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் மறைப்பது குற்றமாகும். அந்த நோக்கத்துடன்*

நடைபெற்ற குற்றத்தை பற்றிய பொய்யான தகவலைத் தருவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றம் நடைபெற்றிருந்தால் அப்படிச் செய்தவருக்கு 7 ஆண்டுகள் வரை சிறைக்காவலுடன் அபராதமும் தண்டணையாக விதிக்கப்படும்.

*பிரிவு 300:*

*கொலைக் குற்றம்*

1. மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு செயலை புரிந்து அதன் விளைவாக மரணம் ஏற்பட்டிருந்தால்
2. உடலில் ஏற்படுத்தப்பட்ட காயத்தால் ஒருவர் மரணமடையலாம் என அறிந்தும் அந்த காயத்தை உண்டாக்குவதால் மரணம் ஏற்பட்டிருந்தால்
3. இந்த காயத்தை ஏற்படுத்தினால் மரணம் நிகழும் என்று அறிருந்திருத்தல்
4. தான் செய்யும் காரியம் அபாயகரமானது அதனால் மரணம் ஏற்படும் என அறிந்த அத்தகைய காரியத்தை புரிதல். அப்படி செய்வதற்கு எந்தவொரு அவசியமும் இல்லாமல் இருத்தல்.

இந்த பிரிவில் சில விதிவிலக்குகளும் இருக்கின்றன.

*விதி விலக்கு 1:*

தீடிரென்று தூண்டப்பட்ட உணர்ச்சியால் நிதானத்தை இழந்து மரணத்தை உண்டாக்கியிருந்தால்.

*விதி விலக்கு 2:*

தன் உடமையை காத்துக் கொள்ளும் பொருட்டு எந்த முன்யோசனையும் இன்றி பிறரை கொல்ல நேரிடலாம்.

*விதி விலக்கு 3:*

ஒரு பொது ஊழியர் கடமையாற்றும் போது ஒருவர் பொது நீதியை நிலை நாட்டும் வகையில் செயல்பட்டு அதனால் மரணம் நிகழ்ந்திருந்தால்.

*விதி விலக்கு 4:*

முன்கூட்டியே திட்டமிடமால் தீடிரென்று ஏற்படும் சண்டையில் உணர்ச்சி கொந்தளப்பில் மரணம் ஏற்பட்டிருந்தால்

*விதி விலக்கு 5:*

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தன்னிச்சையாக மரண அபாயத்தை வலிந்து ஏற்க முன்வந்தால் (அ) மரணம் அடைந்தால் அதை கொலை குற்றமாக கூற முடியாது.

பிரணே=அமிர்தா இந்த ஆணவக் கொலை தெலுங்கானவில் கடந்த ஆண்டு நடைபெற்றது. இந்த வழக்கு இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 300, 302, 34, 1206, 109 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிவு 300 கொலைக்குற்றம்
பிரிவு 302 கொலைகுற்றத்திற்கான தண்டனை

மரண தண்டனை (அ) ஆயுள் தண்டனை விதிக்கப்படுவதுடன் ஆயுள் தண்டனையும் விதிக்கப்படும்.



# ஆசிரியர் கையில் பிடிக்கும் பேனாவின் "மை"

**முனைவர் க. வெங்கடேசன்**
உதவிப்பேராசிரியர்
கல்வியியற்புலம்

இந்த உலகம் இயங்குவதற்குத் தேவை இரண்டு முனை
ஒன்று உழவன் பிடிக்கும் ஏர் முனை
மற்றொன்று ஆசிரியன் பிடிக்கும் பேனா முனை
இந்த இரு முனைகளும் சேர்ந்தால்
இவ்வுலகில் நிகழும் பலத்திருப்புமுனை!
முன்னது உயிர்க் காக்கும்
பின்னது இருளைப் போக்கும்
இப்படிப்பட்ட பேனா முனையில்
ஆசிரியர்கள் எப்படிப்பட்ட 'மை'யைத் தொட்டு எழுதவேண்டும் தெரியுமா?
ஆசிரியர்கள் பல பேர் பலவிதமான 'மை'யைத் தொட்டு எழுதுகிறார்கள்
சில ஆசிரியர்கள்!...
தற்பெரு 'மை'யில் தொட்டு எழுதுகிறார்கள்
சிலரோ!...
பொறா 'மை'யில் தொட்டு எழுதுகிறார்கள்
வேறுசில ஆசிரியர்களோ!....
பழ 'மை'யில் தொட்டு எழுதுகிறார்கள்.
இப்படிப்பட்ட 'மை'களைத் தொட்டு எழுதும்
பேனாவின் முனை அரு 'மை' என்று சொல்லாவிடினும்
ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளலாம்
ஆசிரியர்கள் தொட்டு எழுதக்கூடாத சில 'மை'கள் உள்ளன
இவை என்ன 'மை'கள் தெரிமா?
கய 'மை' – பொய் 'மை' – மட'மை' – வேற்று'மை'
பிறகு எந்த 'மை'யில் தொட்டு எழுதுவது என்று தானே கேட்டுகின்றீர்கள்?
ஆசிரியர்கள் தங்கள் பேனாவில் தொட்டு எழுத வேண்டிய 'மை'கள்
நேர்'மை' – புது'மை' – செம்'மை' – உண்'மை' – வாய்'மை'
இவற்றின் மூலம் ஆசிரியர்கள் நீக்க வேண்டியவை எவை தெரியுமா?
வறு'மை' – ஏழ்'மை' – கல்லா'மை' – அறியா'மை'
ஆகியவற்றை நீக்கும் நோக்கத்திற்கே
ஒரு ஆசிரியனின் பேனா'மை'
கட'மை'யாகவும் – நேர்'மை'யாகவும் – உரி'மை'யாகவும்
பணியாற்றிட வேண்டும்.
இவ்வுண்'மை'யுணர்ந்து
ஆசிரியர் பணியாற்றுவதே
சாலவும் நன்று!

# பெண்ணின் பயணம்

**சி. தாரணி**
II பி.எஸ்சி., பி.எட்.,

மல்லிகை பூவின் வாசம் போல
வெள்ளை நிலவின் ஸ்பரிசம் போல
அன்பின் இனிய உருவம் போல
பெண் குழந்தை பிறந்தாள் அம்மா!

மழலைச் சிரிப்பின் சத்தம் கேட்டு
மயங்கி நின்ற மக்களை எல்லாம்
மயக்கும் வண்ணம் தவழ்ந்து காட்டி
மறக்கடித்தாள் அந்தச் செல்வம்

தத்தி தத்தி நடக்கத் தொடங்கி
தாங்கிக் கொள்ளத் தாயும் இறங்கி
அன்பின் கரங்கள் இருக்கி பிடித்து
அழகாய் நடந்து வந்தாள் அம்மா!

சின்னப் பெண்ணாய் ஆடி ஓடி
சித்திரங்கள் யாவும் வரைந்து
அனைவர் மனதும் கொள்ளைகொண்டு
அன்பால் அவளும் வளர்ந்தாள் அம்மா!

சுட்டிப்பே பெண்ணாய் வந்த அவளும்
சுறுசுறுப்பாய் திரிந்த அவளும்
சிறுது வயது வந்த உடன்
சற்றே மாறிப் போனாள் அம்மா!

கற்க வேண்டியதைச் சிறப்பாய் கற்றுக்
கனவுகளைச் சிறிது உயர்த்தி

# சங்கக் காட்சி

எல்.அபினேஷ்
I பி.எஸ்சி. கணினி அறிவியல்



# இயற்கையை அழிக்காதே!



க.மதுவந்தி
I பி.சி.ஏ., ஆ பிரிவு

# மத நல்லிணக்கம் பேணி! மனித நேயம் காப்போம்!

வ. மகாலட்சுமி
II கல்வியியல்






முன்னுரை

மத நல்லிணக்கம் என்பது, எல்லோரிடத்தும் நட்பு பாராட்டி அறிவுதனைப் புகட்டி அன்பு பேணி அமைதியை வளர்க்கவல்ல மனிதத்தைக் காக்கும் பண்பாகும். ''மனத்தினால் கூட எவர் பொருட்டும் யார்க்கும் இன்னா நினையாமை'' இதுவே மனித நேயத்தைக் காக்க முடியும்; இதைத்தான் வள்ளுவப் பெருமான்,

**''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணா செய்யாமை தலை''**

(குறள். 317, அதிகாரம் : இன்னா செய்யாமை)

இதுபோன்று அறத்துப்பாலில் உள்ள பல அதிகாரங்களில் மத நல்லிணக்கம் எய்த மகத்தான சிந்தனைகள் காணக் கிடக்கின்றன.

**எல்லோரிடத்தும் அன்பு செய்தல் ஒன்றே மனிதநேய நல்லிணக்கம்!**

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றார் புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார். ''பிறவா யாக்கைப் பெரியோன்'' என்று சிலப்பதிகாரத்தில் 'சிவனைப் பெற்றோர் யாரும் இல்லை. ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனை மத கண்டனத்திற்கு உட்படுத்தல் சரியன்று' என்று குறிப்பிடக் காணலாம். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் கொள்கையை போதித்தவர் புத்தர். மக்களின் துன்பங்களைக் கண்டு வருந்தி, மக்களுக்காகப் பாடுபட்டவர். யாரையுமே வெறுக்கவில்லை. யாரையுமே இகழவோ, திட்டவோ இல்லை. இது போன்ற நற்பண்புகளே நல்லிணக்கமாகும்.

**மத நல்லிணக்கம் என் பார்வையில்**

மத நல்லிணக்கம் அறிவுக்கு எட்டடியதை அலங்காரமாகச் சூடிக் கொள்ளாமல் மனப்பூர்வமாக ஏற்று நடை பயில வேண்டியது எல்லா மானிடர் பொறுப்பாகும்.

எடுத்துக்காட்டாக வேலூர் மாவட்டம் திருபத்தூரைச் சேர்ந்த நம் சகோதரி செரினா ஜோஸ்பின் அவர்கள் தனது சாதி சான்றிதழில் ''எந்த சாதியும் இல்லை'' ''எந்த மதமும் இல்லை'' என்று சான்றிதழ் வாங்கியதை இதன் மூலம் நினைவூட்டுகிறேன்.

நம் எதிர்கால சந்ததியினர்களுக்கு நாம் விட்டுச் செல்லும் ஒரு இன்றியமையாத சொத்தாகத் தண்ணீரோடு சேர்த்து மத நல்லிணக்கமும் இருக்க வேண்டும். தண்ணீர் உயிரைக் காக்கும்! மத நல்லிணக்கம் மனித நேயத்தைக் காக்கும்!!

**முடிவுரை**

''மத நல்லிணக்கம் பேண முயற்சிக்கும் நாம், பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கும் போது சாதிச் சான்றிதழ் கேட்பதையும், பணியில் அமர்த்த மானுடர்களுக்கிடையே சாதிப் பிரிவுகள் பார்ப்பதையும் ஒழிப்போம்!

மத நல்லிணக்கத்தை கட்டாயப்படுத்திக்
கட்ட இயலாது
மனித இதயங்களில்
கருவூட்டப்பட்டு
நாளைய சந்ததியினருக்குக்
கல்வெட்டாய்
வித்திட வேண்டும்!
அன்பை வளர்த்து,
அறிவைப் பெருக்குவோம்.
மனித நேயம் இனிதே காப்போம்!

# உயிரில் கலந்த தமிழே!!

செ. கலைச்செல்வி
I பி.எஸ்சி., உயிர் வேதியியல்

சூரியன் இல்லையேல் நமக்குப் பகலும் இல்லை
சந்திரன் இல்லையேல் நமக்கு இரவும் இல்லை
அன்னை இல்லையேல் நமக்கு அன்பும் இல்லை
தந்தை இல்லையேல் நமக்குப் பாசமும் இல்லை
ஆசிரியர் இல்லையேல் நமக்குக் கல்வியும் இல்லை
தமிழ் இல்லையேல் நமக்கு உயிரும் இல்லை!

# நட்பு

மு. ஆர்த்தி தேவி
1 பி.எஸ்சி., பி.எட்.,

நட்பு என்னும் மூன்றெழுத்து இணைந்து
அன்பு எனும் மூன்றெழுத்தை உருவாக்கியது...
அணுவைக் கூட ஆற்றலால் பிரிக்க முடியும்
நட்பை யாராலும் பிரிக்க முடியாது...
காற்றை நம்மால் சுவாசிக்க முடியும்
நட்பை மட்டுமே நேசிக்க முடியும்...!
“கடலின் ஆழம் தெரியவில்லை
நட்பின் ஆழம் புரியவில்லை”...
உயிர் இருக்கும் வரை என்றும் உன் நினைவில்...!



# திருக்குறளின் அதிசயங்கள்

ரி. சுகிர்த ராணி
உதவி பேராசிரியர்
கல்வியியல் துறை

1. திருக்குறளில் ‘தமிழ்’ என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.
2. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42,194
3. திருக்குறளில் தமிழ் எழுத்துக்கள் 247–ல், 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை.
4. திருக்குறளில் இடம் பெறும் இரு மலர்கள் – அனிச்சம், குவளை
5. திருக்குறளில் இடம் பெறும் ஒரு பழம் – நெருஞ்சிப் பழம்
6. திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை – குன்றி மணி
7. திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து – ஔ
8. திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் – பனை, மூங்கில்
9. திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து – னி (1,705 முறை)
10. திருக்குறளில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் – ளீ, ங
11. திருக்குறளில் இடம் பெறாத ஒரே எண் – ஒன்பது
12. திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
13. திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.

# ஆசான்

எஸ். நித்திஷ் குமார்
IV பி.எஸ்சி., பி.எட்.,

விதை செடி ஆவது இயற்கையான நிகழ்வு
அந்தச் செடி நன்றாக வளர்வது மண்ணின் பண்பு
அதுபோல பிறப்பு என்பது இயற்கையான நிகழ்வு
நாம் நற்சிந்தனையோடு வளர்வது என்பது ஆசிரியரின் பண்பு

நெருப்பை ஊக்குவிக்க ஊதுகுழல் தேவை
மாணவர்களின் திறமையை ஊக்குவிக்க ஆசிரியர்கள் தேவை

ஆயிரமரக்கன்றுகளை நடுவது பெரிதன்று - அம் மரக்கன்றுகளுக்கு
நீர் ஊற்றிப் பராமரிப்பதுதான் பெரிது, இத்தகைய
மாபெரும் பணியை ஆசிரியர்கள் செய்கின்றனர் என்பதை அறிவோம்

மாணவர்கள் துடுப்பற்ற படகைப் போன்றோர்கள் - காற்று
எத்திசையில் வீசினாலும் அத்திசையில் செல்வார்கள்
ஆசிரியர்கள் துடுப்பைப் போன்றோர்கள் - அவர்களின்
வாழ்வின் துடுப்பாய் மாறிக் கரையை நோக்கி அழைத்து செல்வார்கள்
இத்தகைய சிறப்புவாய்ந்த பணியைச் செய்யும் ஆசிரியர்களை வணங்குவோம்

# வெற்றி

சி. தாரணி
II பி.எஸ்சி., பி.எட்.,

நெடுஞ் சாலையில், நான்சென்ற பாதையில்,
நான்கண்ட செடி கொடிகள்,
என்னிடம் சென்றுவா, வென்றுவா என்றன,
அச்செடியில் இருந்த, மெல்லிய,
அழகான, இதழ்களைக் கொண்ட
பூக்கள், நீ சென்று வென்ற
பிறகு உன்னைக் கௌரவிக்க
நாங்கள் தயார் என்றன!

# இயற்கையைக் காப்போம்





**எஸ்.விக்ரம்**
III பி.எஸ்சி., நுண்ணுயிரியல்

# இல்லறம் என்னும் நல்லறம்

இன்பத்தின் பகுதி இல்லறத்தின் மிகுதி என்பர். நாடோடி வாழ்க்கை மாறி நாகரீகம் தொடங்கியது முதல் தொடக்கமும் முடிவும் பற்றிக் குழப்பம் இன்றும் உண்டு. இல்லறமா துறவறமா என்றால் வள்ளுவர் இல்லறமே என்கிறார். அதற்கு அவர் கூறும் காட்டுகள் நிறைய

துறந்தவர்க்கும் துவ்வாதவர்கும் இறந்தவர்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை (குறள் 42)

அதில் ஒன்று இல்லறத்தில் தலைவனுக்கு வினை ஆற்றுதல் தகுதி என்றால் தலைவிக்கு தலைவனை உயிராய் மதித்து வாழ்வதே தகுதி. இதனை,

வினையே ஆடவர்க்கு உயிர்
மனையுரை மகளிர்க்கு ஆடவர் உயிர்

என்கிறது சங்கப்பாட்டு. மகளிர் இந்த உலகில் வாழ்வதற்குத் தன் செல்வமாகக் கற்பினைக் கொள்க என்பதே இளங்கோ அவா அதனால் தான் இரண்டாவது அறமாக மனித குலத்திற்கு உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்கிறார். எது கற்பு என்பது பற்றிப் பலவாறு கூறுவர் தமிழர் வாழ்வில் தலையாய நெறியாக அது பின்பற்றப்படுகிறது. தொல்காப்பியர் கற்பினை



முனைவர். யு.துர்காதேவி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை

கற்பெனப் படுவது கரணமொரு புணர
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள் வதுவே
(தொல் பொருள் 53)

என்றும்

கற்பு என்பது தன்கணவனைத் தெய்வமென்று
உணர்வதொரு மேற்கோள் (தொல் பொருள் 53)
என்று கூறுகிறார். வள்ளுவரும்,

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்-51)

என்கிறார். சமுதாயம் பகை, கொலை, கலவரம் இன்றி வாழ வேண்டுமெனில் பெண்டிர் உலகம் கற்பினை முதன்மையாகப் போற்ற வேண்டும் என்பதை உணர்ந்து இவ்விரண்டாவது நீதியைக் கூறுகிறார். இன்றைய நாகரிக உலகிற்கு அதிக தொந்தரவும், தொல்லையும் வரக் காரணம் பெண்களின் கற்பு நிலை மாற்றத்தாலே என்பதை ஊடகங்கள் வழி அறியமுடிகிறது.

## நம் வேந்தர்

எ. அபினேஷ் குமார்
1 பி.எஸ்.சி. (ஐ.டி)

**ஐயமின்றி உதவினீர்**

**சர்க்கரைப் போல் இனித்தீர்**

**பரிசுகள் பல பெற்றீர்**

**கணக்கில்லை நீர் செய்தவை**

**கணேசக் கடவுளைப் போல் நீர் காட்சியளித்துச்**

**சவால்களை நீர் சாதகமாக்கிக் கொள்கின்றீர்!**

**என்னவென்றுச் சொல்வேன் உம் செயல்களை, முடிவில்லை.....**

**சதா. அரவிந்தவதனி**
உதவிப்பேராசிரியர்
கல்வியியல் துறை

# தெய்வத்தாய்



துயிலாமல் கண்விழுத்து விடியும் வரை காத்திருந்தேன்
துன்பத்தை அளித்து என்னைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டாய்
கண் இமைக்கும் நேரத்தில் கண்மணியே நீ மறைந்தாய்
என் அன்னையே ஏன் மறைந்தாய் என்னைவிட்டு
பஞ்சு பதராய் நான் படும் துயரம் அறியாயோ
துஞ்ச வழியின்றித் துடிப்பதை நீ அறியாயோ
வேதனையால் நெஞ்சம் வெந்து துடிக்கின்றேன்
சோதனைகள் செய்யாமல் சொப்பனத்தில் வந்துவிடு
நின்றாலும் நடந்தாலும் அன்னையே உன் நினைவு
நிழல்போல உன்னுருவம் தொடர்வதாகத் தெரிகிறது
உறங்க நினைத்தாலும் என் உணர்வு விழிக்கிறது
இமையை மூடினாலும் நீ திரையில் நிற்கின்றாய்
குலவிளக்காய் இருந்தவளே அன்னையே புனிதவதி
என்னுள் இறையாக இருந்தருள்வாய் என்றும்
என் வாழ்வில்

# வேல்ஸ் வரலாற்றுச் சுவடுகள்




வேல்ஸ் பட்டமளிப்பு விழாச் சிறப்பு விருந்தினர் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திருமிகு எம்.வெங்கைய நாயுடு அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்கள்; உடன் வேல்ஸ் ஆட்சிக் குழுவினர் மற்றும் கல்விக் குழுவினர்



வேல்ஸ் தமிழ்த்துறையுடன் இணைந்து நிகழ்ந்த தென்னிந்திய நாணயவியல் சங்க மாநாட்டின் சிறப்பு விருந்தினர் மேதகு தமிழக ஆளுநர் திருமிகு பன்வாரிலால் புரோகித் அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் ; உடன் 'தினமலர்' டாக்டர் இரா.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர்




வேல்ஸ் நல்கையுடனான சென்னையில் திருவையாறு இசை விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் திருமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ்; உடன் தொழிலதிபர் நல்லியார், நடிகை சரோஜாதேவி, லஷ்மன் ஸ்ருதி இரட்டையர்

# வேல்ஸின் மானுட மேம்பாட்டுப் பணிகள்






வேல்ஸ் விளையாட்டுத் திருநாளில் மாணவ மாணவியர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றிடும் சிறப்பு விருந்தினர்
காவல் துணை ஆணையர் திரு. ஜார்ஜி ஜார்ஜ் ஐபிஎஸ் அவர்களுடன்
வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்கள் உள்ளிட்டோர்



வேல்ஸ் ரோட்டராக்ட் சங்கத் தொடக்க விழா; சென்னை கோல்டன் ஸ்டார் ரோட்டரி தாய்ச் சங்கத்தாருடன் வேல்ஸ் இணைவேந்தர் பேராசிரியர் எ.ஜோதி முருகன் உள்ளிட்டோர்



வேல்ஸ் ரோட்டராக்ட் சங்கத்தின் குருதிக் கொடைத் திருநாள் சென்னை கோல்டன் ஸ்டார் ரோட்டரி தாய்ச் சங்கத்தாருடன் பதிவாளர் ஏ.ஆர்.வீரமணி உள்ளிட்டோர்



நாட்டுநலப் பணித்திட்டப் பொன்விழா ஆண்டின் போக்குவரத்து விழிப்புணர்வில் சென்னைப் பெருநகரக் காவல்துறையுடன் சேவைக் கைக்கோர்க்கும் வேல்ஸ் மாணவர்கள்; காவல் துணை ஆணையர் திரு.என்.எம். மயில்வாகனன் ஐபிஎஸ் அவர்களுடன் இணைத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீமன் நாராயணன் உள்ளிட்டோர்



தேசத்தந்தை காந்தியடிகளின் நூற்றாண்டுப் பொன்விழாவில் பல்லாவரம் நகராட்சியுடன் இணைந்து, தூய்மை இந்தியாவை உருவாக்கும் வேல்ஸ் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள்; பிளாஸ்டிக் கழிவு இல்லாத இந்தியாவுக்கான உறுதியேற்பும் மக்கள் பணியும்

# வெள்ளிவிழா கடந்த கல்வி - பண்பாட்டுப் பயணத்தில் வேல்ஸ்



இந்தியக் குடியரசுத் திருநாளில் தேசியக் கொடியினையேற்றி அணி செய்யும் வேல்ஸ் வேந்தர்; உடன் துணைவேந்தர் பேரா. பி.சுவாமிநாதன், பதிவாளர் பேரா.ஏ.ஆர்.வீரமணி உள்ளிட்டோர்



வேல்ஸ் பொதுமைப் பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினர் சென்னைப் பல்கலைத் தமிழ்மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுடன் இணைவேந்தர் பேரா. ஆ.ஜோதி முருகன் உள்ளிட்டோர்




புதுவரவுப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான வேல்ஸ் குறிஞ்சித் திருநாளில் சிறப்பு விருந்தினர் தன்னம்பிக்கைச் சிகரம் திரு.தாமு அவர்களுடன் வேல்ஸ் வேந்தர், திருமதி வேந்தர் உள்ளிட்டோர்




வேல்ஸ் புதுவரவுப் பொறியியல் மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான குறிஞ்சித் திருநாளில் சிறப்பு விருந்தினர் அண்ணா பல்கலைக்கழகப் படிகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர்.ஜெயவேல் அவர்களுடன் வேந்தர் உள்ளிட்டோர்



வேல்ஸ் ஆசிரியர் திருநாளின் சிறப்பு விருந்தினர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.தாமரைச்செல்வி சோமசுந்தரம் அவர்களுடன் வேல்ஸ் இணைவேந்தர் பேரா. ஆ. ஜோதி முருகன், இணைத் துணைவேந்தர் பேரா.எஸ்.ஸ்ரீமன் நாராயணன், பதிவாளர் பேரா.ஏ.ஆர்.வீரமணி, தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பேரா.சு.வெங்கட்ராமன் மற்றும் விருது பெற்ற வேல்ஸ் பேராசிரியர்கள்



NAAC தரச்சான்றில் A கிரேடு பெற்றுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்கள் NAAC தரமதிப்பீட்டுக் குழுவினரை வரவேற்று மகிழ்தல்; உடன் இணைவேந்தர்கள், துணைவேந்தர், பதிவாளர் ஆகியோர்

# வேல்ஸின் மரபும் புதுமையும்



வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் மையம் கொண்ட நிகழ்வில்
தமிழகப் பள்ளிக் கல்வி அமைச்சர்
மாண்புமிகு எஸ். செங்கோட்டையன் அவர்களுடன்
வேல்ஸ் வேந்தர்



வேல்ஸ் அறிவியல் திருநாள் சிறப்பு விருந்தினர் தமிழகத்
தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு எம்.சி. சம்பத்
அவர்களுடன் வேல்ஸ் வேந்தர்



இலண்டன் பாராளுமன்றத்தில் சிறந்த கல்விச்
சேவைக்கான விருதை வேல்ஸ் வேந்தர் அவர்களுக்குப்
பாராளுமன்ற உறுப்பினர்
திரு. ஸ்டீவ் ரீட் வழங்கிச் சிறப்பித்தல்



வேல்ஸ் குடும்பத் திருநாள் விழாவில் 'வேல்சு சிறகு'
இதழை வெளியிடும் உலகநாயகன் திரு. கமலஹாசன்
அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் ; உடன் குடும்பத்தினர்
உள்ளிட்டோர்.






## அலை கடலுக்கு அப்பாலும் வேல்ஸ் உதயம்

எழில்கொஞ்சும் இங்கிலாந்தின் இலண்டன்  மாநகரில்
செம்மாந்து நிற்கும் கேம்பிரிட்ஜ் டியூடர்ஸ் காலேஜ்

வளர்ச்சி கொழிக்கும் சிங்கப்பூரில் வண்ணமிகு
கல்வி நல்கும் கிண்டில் கிட்ஸ் பன்னாட்டுப் பள்ளி

# கனவு

**மனிஷா கு**
முதுஅறிவியல் வேதியியல்
இரண்டாம் ஆண்டு




கனவு என்பது ஒருவர் தூங்கும் பொழுது அவரது மனத்தில் எழும் மனப்படிமங்கள், காட்சிகள், ஓசைகள், உணர்வுகள் நிகழ்வுகளைக் குறிக்கிறது. ஒருவர் கனவுகாணும் பொழுது அவரது கண்களின் அசைவுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. கனவு என்றால் என்ன என்பது தொடர்பாக ஒரு முழுமையான அறிவியல் புரிதல் இன்னும் இல்லை. மூளையில் உள்ள நினைவுக் குறிப்புகளை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தும் செயல்பாட்டின் விளைவாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இது அனைத்துப் பாலூட்டிகளிலும் ஏற்படக் கூடிய விளைவாகும்.

ஆர்மடில் லோக்களில் மிகுதியாக இருப்பதாக அறியபட்டுள்ளது. கனவுகளில் பல வகைகள் உள்ளன. தெளிவான கனவு அவற்றுள் ஒன்று உறக்க நிலையில் ஒருவர் கனவு காணும் போது தான் காணும் கனவுகள் என்ற விழிப்புணர்வை கனவு காண்பவரிடம் ஏற்படுத்தும். பொதுவாக ஒருவர் கனவுகளில் ஆழ்ந்து இருக்கும் சமயத்தில் அவரால் கனவுதனைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனால் இந்த தெளிவான கனவுகள் நமது உறக்க நிலையையும் தாண்டி நமது ஆழ்மனது விழிப்புணர்வுடன் இருக்கும் பொழுது ஏற்படுவது ஆகும். சாதாரண கனவுகள் மற்றொரு வகை கனவாகும் நாம் உறங்கும் பொது நமக்கு வரும் ஒரு கனவில் நமக்கு எதிரே ஒரு புத்தகம் இருப்பதாக நினைத்து கொள்வோம் சாதாரண கனவுகள் மூலம் இந்த எடுத்தக் காட்டை கூற விளைந்தால், அடுத்து என்ன நாம் செய்வோம் என்பதை நமது ஆழ்மனது தான் நிர்ணயிக்கும் அந்த நொடி பொழுதில் நாமே நினைத்தாலும் நமது எண்ண ஆற்றலால் அந்த புத்தகத்தின் மீதோ அந்தே கனவுலகின் பொருட்களின் மீதோ நம்மாள் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தி விடமுடியாது இன்னும் கூற விளைந்தால் அந்த கனவு முடிந்து நாம் எழுந்த பின்பு தான் இப்படிப்பட்ட கனவே நாம் கண்டிருக்கிறோம் என்பதே தெரியவரும் எனவே கனவு என்பது தூக்கத்தில் மனத்திரையில் எழும் காட்சி. கனவு என்பது வேறு சொல் மட்டும அல்ல அது உணர்வின் வெளிபாடாகும்.

“கனவு என்பது வெற்றியை நோக்கிய பயணமாக அமையவேண்டும்.

# மழைத்துளி



அளவாய் வரும் போது
அமுதத்துளி
அளவின்றி வரும்போது
அதுவே விஷத்துளி
அறவே வராத போது
வரவைக்கும் கண்ணீர்த்துளி
மொத்தத்தில் இதுவே
மண்ணின் உயிர்த்துளி
சித்தத்தில் உறுதிகொண்டு
சேமிப்போம் மழைத்துளி



கே.ஞானபிரசாத்

## மகாகவி பாரதியார்




கவிதை:

தேருக்கு தேவை
சாரதி:
கவிதைக்கு தேவை
பாரதி:


மு.கீர்த்திவாசன்
II வணிகவியல் அ பிரிவு

# மலையன்ன மேன்மை

முனைவர் **சு. கார்த்தியாயினி**
இணைப்பேராசிரியர்
கல்வியியல் துறை



மேன்மையான குணம்
மேலாகிய கருணை
கடவுள் வழிபாடு
பல நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவு
நற்பொருளை மாணாக்கனுக்கு உணர்த்தும்
உரை வன்மை
நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் பூவையும்
ஒத்திருக்கின்ற மேன்மை
உலக நடையறிவு
அறிவோடு உயர்ந்த குணம்
மாணவன் உயர அவனுள் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல்
எந்தச் சூழலையும் எதிர்கொள்ளும் தன்னம்பிக்கையை
வளர்க்கும் திறன்
இவையெல்லாம் போதிக்கும்
போற்றுதலுக்குரியவரே
நம் ஆசிரியர்கள்

# பெண்களின் பாதுகாப்பு

பா. அனிதா
இளம் அறிவியல் கணிதம்
மூன்றாம் ஆண்டு



இன்றைய நிலையில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றனர். ஆணும், பெண்ணும் சமம் என்ற கருத்தினை ஒவ்வொரு நிமிடத்திலும் பெண்கள் தனக்குக் கிடைக்கும் வாய்ப்புகளின் மூலம் நிரூபிக்கின்றனர். ஆனால், இன்றைய நிலையில் பெண்களுக்குப் பாதுகாப்பு உள்ளதா? என்றக் கேள்வி நம் ஒவ்வொருவரின் மனதிலும் ஒரு விடைத் தெரியாத புதிராகவே இருக்கிறது.

உலகிலேயே பெண்களுக்கு மிக ஆபத்தான நாடு இந்தியா என தாம்ஸ்ன் ராய்டர்ஸ் ஃபவுண்டேஷன் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு நாடு முழுவதுதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இக்கருத்தை பலரும் ஏற்க மறுக்கின்றனர். இந்தியாவை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பிற நாடுகளில் பெண்களுக்குப் பாதுகாப்பும், உரிமைகளும் குறைவாகவே உள்ளது என்பதனையும் பலர் கூறுகின்றனர்.
மேலும் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் தற்போது தான் பெண்களுக்கு வாகனம் ஓட்டும் உரிமையே வழங்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகள் என்று கூறப்படும் நாடுகளில் குற்றங்கள் எந்தளவுக்கு வெளியில் காட்டப்படுகின்றன என்பது தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் உள்ள பெண்கள் இதற்கு முன்பு இருந்த காலங்களைக் காட்டிலும், சட்ட உரிமைகள் மற்றும் சட்ட அமைப்பை அணுகும் நடைமுறைகள் குறித்து நன்கு அறிந்துள்ளனர் என்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா ஷர்மா தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி, தற்போது இருக்கக்கூடிய சட்டங்களைச் சரியாகப் பயன்படுத்தினாலேயே குற்றங்களை நிச்சயமாக குறைக்கலாம் என்பது அனைத்து மக்களிடத்திலும் ஒரு பொதுவான கருத்தாக உள்ளது.

விஷம நோக்கத்துடன் வருபவர்களைச் சமாளிக்க தற்காப்பு வித்தைகளை கற்று வைத்திருப்பது பெண்களுக்கு நல்ல பாதுகாப்பை வழங்கும் பாதுகாப்புகளை மீறி குற்றம் நடக்கும் இக்கட்டான சூழலில் சாதுரியமாக செயல்படும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே பெண்களின் அதிகபட்ச கருத்தாக உள்ளது.

மேலும், பெண்களின் பாதுகாப்பு பற்றி அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை உற்றுநோக்கிப் பார்க்கும் பொழுது, இந்தியாவில் பணியிடத்தில் பாலியல் வன்முறையிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு, குறைதீர்ப்பு) சட்டம், 2013 நிறைவேற்றப்பட்டது. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (The Protection of children from sexual offfenses (POCSO) act. 2012) என்பது, இந்தியாவில் பாலியல் குற்றங்களிலிருந்துக் குழந்தைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் வரும்முன், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை, இந்திய தண்டனை சட்டப்பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

பாலியல் துன்புறுத்தல் பற்றி புகார் சொல்லும் பெண்கள், பாலியல் துன்புறுத்தல்களை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் தடுப்பு குழுவிடம் புகார் அளிக்கக வேண்டும். இவர்களின் இந்த ஒரு செயலே குற்றங்கள் குறைய வழிவகுக்கும்.

பிரிவு 34:
கூட்டு நோக்கம்

ஒரு குற்ற செயலை கூட்டு நோக்கோடு புரியும்போது ஒவ்வொருவரும் தனிதனியாக அந்த குற்றத்தை புரிந்தவராகவே கருதப்படும்.

பிரிவு 109:

தூண்டிவிடப்பட்ட செயல் அதன் விளைவால் புரியப்பட்டால் மற்றும் அதனின் தண்டனைக்கான வெளிப்படையான ஷரத்து செய்யப்படமால் இருக்கும்போது தூண்டுதலுக்கான தண்டனை.
அந்த தூண்டுதலின் விளைவால் ஒரு செயல் (அ) குற்றம் புரியப்படும்போது தூண்டுதலில் விளைவால் அது புரியப்பட்டிருப்பதாக கூறப்படும்.

பிரிவு 1206:
குற்றச் சதிக்கு தண்டனை

(1) எவரேனும் மரண தண்டனை (அ) ஆயுள் (அ) இரண்டு வருடங்கள் (அ) மேற்பட்ட கால அளவிலான கடுங்காவல் சிறைத்தண்டனையுடன் தண்டிக்கப்படக் கூடிய குற்றத்தை புரிந்து இருந்தால் அதே முறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

(2) மேற்கூறப்பட்டவாறாக குற்றச் சதியை தவிர பிற ஒரு குற்றச் சதியை செய்திருந்தால் ஆறு மாதங்களுக்கு மிகாத ஒரு கால அளவிலான சிறைத்தண்டனை (அ) அபராதத்துடன் (அ) இரண்டும் தண்டனையும் வழங்கப்படும்.

ஹரிஷ், மீனாட்சி இந்த ஆணவப் படுகொலை கிருஷ்ணகிரியில் நடைபெற்றது இந்த வழக்கு பிரிவு 300 இந்திய தண்டனை சட்டம் 1860 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
கெவின் ஜோப், நீனு சாக்கோ இந்த ஆணவக் கொலை கேரளாவில் நடைபெற்றது. ஹிந்த வழக்கு இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவுகள் 300, 120(6) கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
இந்த ஆணவக் கொலைகள் இந்திய அரசியலமைப்பு சட்டம் நிபந்தனைகள் 14, 15(1), 15(3), 19, 21, 39(F) ஆகியவற்றை மீறுவதாக உள்ளது.

இந்த ஆணவக் கொலைகளால் பல குடும்பங்கள் தங்களின் பிள்ளைகளை இழக்கின்றனர் பல குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழக்கின்றனர். இந்த ஆணவக் கொலைகள் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.

# பெண்ணின் வளர்ச்சியில் பெரியாரின் பங்கு



- குழந்தை மணத்தை (திருமணம்) ஒழித்து! குழந்தை உள்ளத்தை வர வைத்தார்.
- உரிய வயதில் திருமணம் செய்து பெண்களுக்கு மறுமணம் என்ற சட்டத்தையும் கொண்டு வந்தார்.
- வீட்டில் குடும்ப பணிகளையும் மட்டுமே செய்த பெண்கள் இன்று நாட்டின் பணிகளையும் செய்யும் நம் இரு கண்கள்!
- இந்த மண்ணுலகை காண்பித்தவளும் பெண்தான்! முதலில் விண்ணுலகம் சென்று வந்தவளும் பெண்தான்!
- பெண்கள் அசுத்தமான வாழ்க்கையை விட்டு சுத்தமான வாழ்க்கையை கொண்டு வந்தார்.
- பெண்கள் உடையிலும் அலங்காரத்திலும் பைத்தியம் ஆவதை விட்டு வைத்தியம் (மருத்துவம்) என்ற பணியில் ஈடுபட வேண்டும் என்றார்.
- வீட்டின் பணியை விட்டு அரசு பணியில் ஈடுபட வேண்டும்.

**ஜெ.எப்சிபா விக்டோரியா**
**இளங்கலை வணிகவியல்**

# அன்னை

டி. கிளமான்சியா
I பி.எஸ்சி., பி.எட்.,

இறைக்கே இணையாகி
வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் இவள்
இரு ஐந்திங்கள்
வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி ஓர்
உயிரை ஈன்றெடுக்கும்
சுமை தாங்கி இவள்
பெற்ற பிள்ளைக்குப்
பெயர்சூட்டித்
தாலாட்டிச் சோறுட்டி
முடிசூட்டப் போராடும்
மணிமகுடம் அணியா அரசி அவள்
ஆம் அவள்தான் நம் அன்னை!

# விடை முற்றும்

ரா. அஜிதா
IV பி.எஸ்சி., பி.எட்.,

ஏற்றுக் கொள்ள முடியவில்லை– உன்
பிரிவின் துயரம்!
இனி எப்போது உனக்கும் எனக்குமான
உறவு சேரும்?
நீ கற்பித்த கல்வி என்னும் பெருநிதியத்தோடு
விடைபெறுகிறேன்

உன்னைப் பிரிந்து செல்கையில்
உந்தன் வேல்ஸ் வாசத்தால்
என் வாழ்க்கை வசந்த காலமாய் மாறும்...!

# என் கல்வி தந்தை



**பி.தினகரன்**
I பி.எஸ்சி., பி.எட்.,

# அப்துல்கலாமின் வாழ்வும் கொடையும்

பாரத ரத்னா அப்துல் கலாம் அவர்கள் ஜூலை 27, 2015 இல் ஷில்லாங்கில் உள்ள "இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்டில்" மேடையில் பேசிக்கொண்டிருந்த போதே அவர்தம் உன்னத வாழ்வு நிறைவுப்பெற்றது; வரலாறாய் மலர்ந்தது.

அவர் பெற்ற விருதுகளின் அணிவகுப்பு இதோ...

கா.நரேஷ்குமார்
இளம் வணிகவியல்
முதலாம் ஆண்டு



- ❖ பத்ம பூஷன் (1981,1990)-பத்ம விபூஷன்
- ❖ 1997-பாரதரத்னா
- ❖ 1997-தேசிய ஒருங்கிணைப்பு இந்திராகாந்தி விருது
- ❖ 1998-வீர் சவர்கார் விருது
- ❖ 2000-ராமானுஜன் விருது
- ❖ 2007-அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம்
- ❖ 2007-கிங் சார்லஸ்-II பட்டம்
- ❖ 2008-பொறியியல் டாக்டர் பட்டம்
- ❖ 2009-சர்வதேச வோன் கார்மான் விங்ஸ் விருது
- ❖ 2009-ஹூவர் மெடல்
- ❖ 2010-பொறியியல் டாக்டர் பட்டம்
- ❖ 2012-சட்டங்களின் டாக்டர்
- ❖ 2012-சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது.

டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் எழுதி அவர்கள் எழுதிப் படைத்த அறிவு விருந்து நூல்கள்

- ❖ அக்னிச் சிறகுகள்
- ❖ இந்தியா 2020
- ❖ எழுச்சி தீபங்கள்
- ❖ அப்புறம் பிறந்தது ஒரு குழந்தை - ஆகியன.

இறுதிவரைக்கும் பிரம்மச்சாரியாக வாழ்ந்த ஏ.பி.ஜே அப்துல் கலாமின் எளிமையான வாழ்க்கையும், அவரது இனிமையான பேச்சும் எல்லோரையும் கவர்ந்தது என்றால் வியப்பில்லை. "எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்" என்று எண்ணிய அவர் "கனவு காணுங்கள்! அந்த கனவை நனவாக்கப் பாடுபடுங்கள்" என்னும் வாக்கியத்தை இளைஞர்களின் மனதில் வேரூன்றச் செய்தவர்.

உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

# நீக்குவோம் இந்தக் கருப்புத் திரையை

ந.சதாம் உசேன்
காட்சித் தொடர்பியல் ஆ பிரிவு
இரண்டாம் ஆண்டு

என் மாமா எப்பொழுதும் ஆங்கில பேய்ப் படங்களை அதிகமாகப் பார்ப்பார், அவரிடம் சேர்ந்து நானும் பேய்ப் படங்களை அதிகமாகப் பார்க்க ஆரம்பித்தேன். எப்பொழுதும் சில நேரங்களில் மாமா படம் பார்க்கும் போது என் மாமா திடீரென்று படத்தை ஓட்டுவார். நானும் ஏன் என்று பலமுறை கேட்டுள்ளேன். ஆனால், அவர் பதில் சொன்னதில்லை, சரியென்று ஒரு நாள் அவர் இல்லாத நேரத்தில் அவர் ஏன், எதை ஓட்டினார் என்று ஆர்வம் கொண்டு பார்த்தேன்.

(கருப்புத் திரை) 3 (அ) 4 நொடி

மனதில் எதுவும் இல்லாமல் சிரித்த முகத்தோடு, சில
சேட்டைகள் நான் செய்வதால், என் தாய் என்னிடம்
அவரின் கைபேசியைத் தந்து ஒரே இடத்தில்
அமர வைப்பார். நானும் கைபேசியில் தினம் ஓர்
விளையாட்டு விளையாடுவேன். சிறிது நாள் கழித்து
எப்பொழுதும் விளையாட்டு எதற்கு என்று புகைப்படம்
வீடியோக்களைப் பார்க்க ஆரம்பித்தேன் அன்று
ஓர் வீடியோவைப் பார்த்தேன் மாமா ஓட்டிய
பேய்ப் படத்தைப் போல்.

(கருப்புத் திரை) 3 (அ) 4 நொடி

நான் என் அம்மா, அப்பா, அண்ணன்கள் அனைவரும் தினமும் ஒன்றாகத்தான் உறங்குவோம். ஒரு நாள் அம்மா அண்ணன்கள் இருவரையும் சித்தி வீட்டில் உறங்குமாறும், என்னை இங்கே உறங்குமாறும் கூறினார். சரியென்று அண்ணனும் கிளம்பினான், நானும் உறங்கினேன். திடீரென்று நான் சிறு சத்தம் கேட்டுக் கண் விரித்துப் போர்வையின் ஓரமாகப் பார்த்தேன்.

(கருப்புத் திரை) 3 (அ) 4 நொடி

மாலையில் மாடியில் நின்று பறவைகள் பறப்பதைப் பார்ப்பது
என் பழக்கமே, அங்குப் பக்கத்து மாடியில் சித்ரா ஆண்ட்டி
அதே நேரம் அவர் காலையில் காயப் போட்ட
துணிகளை எடுக்க வருவார்கள். ஒரு நாள் காலையில்
நான் பறவைகளைப் பார்க்கச் சென்றேன். அப்போது சித்ரா
ஆண்ட்டி துணிகளைக் காயப் போட்டார். நானும் அதைப்
பார்த்தேன், மனமும், குணமும் மாறியது.
நான் கீழேப் பார்த்தேன்.

(கருப்புத் திரை) 3 (அ) 4 நொடி

இதைப் போல் பல நிகழ்வுகள் என் குணம், சிந்தனைகள்
போன்றவற்றை மாற்றின. எவை கண்டாலும்
அதில் கலந்துவிடுகிறது. பொள்ளாச்சியில் நடந்த நான்கு
கொடூரர்களின் செய்தியைக் கேட்டும், பார்த்தபின்பும் என்

மனம் வலி மறந்து இன்பம் தந்த என் மனதிற்கு
இன்பம் மறந்த வலியும் தந்தது, என்னை மாற்ற
நான் செய்தது எதுவாயினும் அவை சரியாகவில்லை
என் குணம் எவ்வப்போது யாரையாவது துன்புறுத்தும்
சூழ்நிலை வரும். ஆகையால் மாற்றம் மாறட்டும் என் முதல்
காமம் பெரியதல்ல என்று அனைவரும் உணரட்டும்.
பார்க்கும் பொருள் பார்ப்பதற்கும், பழகுவதற்கும் அல்ல
உற்றுப்பார் அப்பொருள் பார்வையாளர் ஆகிவிடும்.
ஒரு தந்தை தன் ஆறு வயது மகன் தட்டில் சோறைச்
சாப்பிடச் சொன்னார். அதைச் சுற்றி இறைத்துக் கொண்டே
சாப்பிட அத்தந்தை மகனிடம் சாப்பாட்டை இறைக்காமல்
சாப்பிடு என்று கூறினார்.

---

# இன்றைய உழவனின் நிலை

**எம்.எஸ்.விஷ்ணுகுமார்**
II பி.இ. (இசிஇ)

என் நா சோற்றைத் தீண்ட
உன் கால் சேற்றைத் தீண்டியதடா
கடன் சுமை தீராது இருக்கும் நீயோ
எம் பசிச் சுமை தீர்க்க வந்தாய்...
ஏர் எடுத்த நின் தலையை
ஏறெடுத்தும் பார்க்க வில்லையே...
நீ எத்தனைப் பயிர் வளர்த்தாலும்
நீ மட்டும் வளராது இருப்பது ஏனோ?

விளை நிலத்தில் கரும் தார் ஊற்ற
நினைப்பது ஏனோ?
விளைநிலத்தை மனை நிலமாக
மாற்றுவது ஏனோ?
பசி வந்தால் கோபம் தலைக்கேறும்
அந்தக் கோபத்தைத் தணிக்க விவசாயி
என்னும் மருத்துவன் வேண்டும்
நீரின்றித் தன் கண்ணீரால் நீர் பாய்ச்சினான்
நீரும் இல்லை ஓட்ட ஏறும் இல்லை
சுழன்றும் ஏர் பின்னது உலகம்
என்றான் வள்ளுவன் அத்தகைய
விவசாயத்தைப் போற்றுவோம்
இன்றைய உழவனின் நிலையை மாற்றுவோம்!

# நீட் தேர்வு

**தி. தாரணி**
I பி.எஸ்சி. உயிரி வேதியியல்

இரண்டு வருடத் தவம்
படிக்க வேண்டும் மருத்துவம்
தவமும் களைந்தது
கனவும் களைந்தது.
கடும் தோய்வு தந்த நீட் தேர்வு
வாழ்வைப் புரட்டிய கலந்தாய்வு
மிஞ்சியதோ தோல்வியும் மரணங்களுமே!

# என் ஆசிரியர்களே

எம். ஹேமலதா
I பி.எஸ்சி., பி.எட்.,



கண்ணீர் சிந்தப் பாதம் பதித்தேன்
கட்டி அணைத்துத் தாயானாய்
காண்பதை எல்லாம் இரசிக்கச் சொன்னாய்,
காரணம் எல்லாம் கற்றுத் தந்தாய்,
எண், நிறம், நேரம், கலை, மொழி,
மற்றும் பல கற்றுத் தந்தாய்
அறிவுக்கு....
பாசம், நேசம், குணம், திறன்
பற்பல பண்புகளுக்கு இலக்கணப்
பாடம் ஆனாய் வாழ்க்கைக்கு...
சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தாய்...
கேள்விகளுக்கெல்லாம் பதில் ஆனாய்...
அறியாமைக்கு ஆச்சரியக்குறி வரைந்தாய்...
உலகத்தை விரல் நுனியில் சுற்றிக் காண்பித்தாய்...
தோல்வியுற்ற போதோ தேற்றம்...
வெற்றி பெற்ற போதோ ஊக்கம்...
இடைவிடாமல் ஊட்டினாய்...
பல வேடமிட்டுப் பாடம் புகட்டினீர்...
வகுப்புகள் கூடும் போது கை பிடித்தீர்...
குயவனாய், சிற்பியாய், கலைஞனாய்...
ஒரே நேரத்தில் பல பொன்னைக் கையாளும்
பொற்கொல்லனே...
என் ஆசானே...
என்னை மதி நிறைந்த மனிதன்
ஆக்கிய மேதைகளே...
உமது ஆயுளும், பணியும் நீடிக்கட்டும்...
தாய்மொழித் தமிழைப் போலவே
என் வாழ்நாள் முழுவதும் வந்த

அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி...
நினைவு உள்ளவரை யாரும்
மறக்காத உறவு ஆசிரியரின் உறவு



## டி.ஜெனிபர்மேரி

I பி.எட்.,

## மழைநீரை சேமிப்போம்



## எஸ்தர் குணசெல்வி.கே

I பி.எஸ்சி., பி.எட்.,



# விவசாயி

நா.கோகுல்
சட்டத்துறை
மூன்றாம் ஆண்டு

உழைத்துத் தன் குடும்பத்தை மட்டும் முன்னேற்றும் மனிதர்களில்-தான்
உண்ணாது அயராது உழைத்துப் பிறரை உண்ண வைப்பதில்
உமக்கு நிகர் யாரும் உண்டோ?
உழைத்த பணத்தில் வண்ண ஆடைகள் அணியும் மக்கள் கூட்டத்தில்
ஒரே நிற ஆடையை மாற்றி மாற்றி அணிந்தவரே!
நகரங்களில் குளிர் அறையில் அமர்ந்து மேற்கத்திய உணவு
உண்டாலும்-வயல்காட்டு
வரப்புகளில் உட்கார்ந்து உண்ணும் பழைய சோற்றிற்கும்
பச்சை மிளகாய்க்கும் ஈடாகுமா?
விவசாய நிலங்களைக் கூறு போட்டு விற்கும் இக்காலத்தில்.
அக்காலத்தே நிலங்கள் அனைத்தையும் பசுமையாக்கி விவசாயம்
செய்த விவசாயி நீயே உயர்ந்தவர்!
இன்றோ அறை குறை அறிவியலைப் படித்து விட்டு வானிலை
அறிவிப்பைக் காட்டுகிறார்கள் ஆனாலும்
வானம் பார்த்தே அறிவியல் பேசும் நீயே அறிவியல் அறிஞர்!
பணக்காரன் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் வெளிநாட்டில்
அடைக்களமாகிறான் -ஆனால் விவசாயி வாங்கிய
கடனைக் கட்டமுடியாமல் தூக்கு மேடை ஏறுகிறான்.
உண்பவன் இறைவனே ஆயினும் படைப்பவன் விவசாயிதான்.
நாம் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டாம்,
ஏழையின் கண்ணில் வரும் கண்ணீரைத் தடுத்தால் போதும்!
உலகுக்கே சோறு போட்ட நம் தமிழினத்தின்
விவசாயத்தையும் காப்போம்! விவசாயியையும் காப்போம்!

# வெண்ணிலவு

வே. உமா மகேஸ்வரி
I பி.எஸ்சி., பி.எட்.,

வெள்ளை நிற வெண்ணிலவே
வெண்மையாய் இருக்கும் உன்னை
வெறுப்பார் யாருமில்லை– ஏனோ
வெகுதூரம் இருப்பது– ஏனோ
வெளந்தி மனிதர் பலர்
வெறுமையாய் வாழும் உலகம் இது
வெண்மையாய் இருக்க வேண்டும்

ஆனால்
வெகுதூரமே இருந்து வீடு
கரைபடிந்த உலகம் இது
கரைபடிய வைத்து விடும்
வெகுதூரமே இருந்து விடு.

# அண்ணன்

அ.ஜ. ஸய்யிதத் பாத்திமா
I பி.எஸ்சி., பி.எட்.,

என்னைக் கண்டிப்பதில் தாயாய்
இருந்தாய்,
என்னை வழிநடத்துவதில் தந்தையாய்
இருந்தாய்,
என்னைக் கோபிப்பதில் சகோதரனாய்
இருந்தாய்,
என்னை அன்பு செய்வதில் தோழியாய்
இருந்தாய்–
இவை அனைத்தையும்
ஓர் உருவில் பார்த்தேன்
என் அண்ணனாக...!

# அம்மா

**த. சூரியகலா**
II பி.எஸ்சி., பி.எட்.,



அம்மா என்று அழைக்கும் முன்பே
ஆசையோடு ஓடி வந்து
அவசியம் கேட்டு அறிவாய்
இமைக்க மறந்தாலும்!
ஈன்று எடுத்தவளே நீ என்னை மறப்பதில்லை
உன்னைப்போல் அன்பு செய்ய
அந்த படைத்தவனுக்கும் தெரிவதில்லை!
ஊர் தோறும் சென்று உரக்கச் சொல்வேன்
என் தாய் அந்த படைத்தவனைவிட மேலானவள் என்று
வரம் ஒன்று நான் கேட்பேன்
என் தாய்க்கு!
என் ஆயுள் பாதிக் கொடுக்கச்சொல்லி
வரமாக வந்தவேளே
கரம் பிடித்துக் கரை சேர்த்தவளே
கடனாளி ஆக்கி விடுவாயோ
பட்ட கடன் எப்படித் தீர்ப்பேன் அம்மா!




டி.விக்ரம்
பி.சி.ஏ.
முதலாம் ஆண்டு


# உழவுத் தொழில்

முன்னுரை:

மனிதர் வாழ்வுக்கு இன்றியமையாதன "உண்டி,உடை உறையுள்" என்பவை இம்மூன்று தருதலே 'அறம்' என்பது மணிமேகலையார் உழவர் தொழில் என்றென்றும் முதன்மையான தொழில். "அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள்; மண்ணுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதும் இல்லை" என்பது அவர் வாக்கு இம்மூன்றையும் உலகுக்குத் தருவார் உழவரே யாவர்.

உழவின் பெருமை:

செய்யும் தொழிலே தெய்வ தொழிலாய், அறத் தொழிலாய் அமைந்த பெருமையுடையது 'உழவு' மற்றையத் தொழில்கள் இயங்குவதற்கு மூலத் தொழிலாய் இருப்பதும் உழவே அதனால்தான் நம் முன்னோர் "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்றும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும்,
சுழன்றும்ஏர் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை." என்றும் வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

பாடுபுகழ்:

உழவர் முடிச்சிறப்பே என்றும் ....... ஏர்க்களச் சிறப்பே 'போர்க்களச் சிறப்பென்றும்' உழவர் கோட்டை றந்துப் போனால் 'மன்னர் கோட்டை சிதைந்து விடும்' என்று சிறப்பித்து கூறியுள்ளனர். உழவர் கையே 'திருக்கை' என்றும் பாராட்டியுள்ளனர் ஆயினும் உழவர்கள் வாழ்வு பெருமைக்குரியதாக உயர்ந்து விடவில்லை! புகழ்ந்தால் போதுமா? "உழவினார் கைம்மடங்கின் இல்லை" என்று வள்ளுவர் அழகாக எடுத்து உரைக்கிறார்.

முன்னாளில் உழவு:

ஒரு காலத்தில் உழவுத்தொழில் பெரும்பாலும் மழையை நம்பியே நடைப்பெற்றது.
"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்.
துப்பாய தூஉம் மழை.

உழவர் துயர் தீர்க்கச் சட்டங்கள்

உழவர்கள் படும்துயர்நிலை 'ஆட்சியாளரை' அசைத்தது. அறிஞர்களை 'சிந்திக்க' வைத்தது; உழைத்து உழைத்து 'ஓடாக தேய்கிறார்கள்' உழவர்கள்.

புதுமுறை:

இப்பொழுது உழவு முறையில் புதுமை நிரம்பி காணப்படும். மரக்கலப்பை இருந்த இடத்தில் 'இரும்புக் கலப்பைகள்' உழக் காண்கிறோம். கலவை இறைவை மாறிக் 'குழாய்க் கிணற்று இறைவை வந்துள்ளது. மின்சாரமும், டிராக்டர்களும் உழவர்களுக்கு உற்ற துணையாகின்றன.

முடிவுரை:

"கையில் மண்படா வாழ்வே உயர்ந்த வாழ்வே" என்று போலி எண்ணம் மறைந்து கற்றவர்கள் உழவை மகிந்து உழவுத்தொழில் ஈடுபட்டால் மற்ற நாடுகளைப் போலவே நம் நாடும் உழவுத் தொழில் உயரும் என்பது உறுதி.

"உழுங்குலத்தில் பிறந்ததாரே உலகியப் பிறந்தாரே!"

# "நான் மரம் பேசுகிறேன்"



நான், மழை நிழல் மட்டுமல்ல. . . . பறவைகளுக்கு வசிப்பிடமும், கால்நடைகளுக்குத் தழையும் மனிதர்களுக்கு சகலமும் தருகிறேன். மண்ணரிப்பையும் தடுக்கிறேன். இப்படி எல்லாருக்கும் எல்லாம் தரும் என்னை ஏன் வெட்டுகிறார்கள் என்றுதான் புரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்களால் அழிந்து போகிறேன். இது இயற்கை, அதை மாற்ற முடியாது.

மனிதர்கள், சாலை விரிவாக்கம், வீடுகட்டுதல் போன்ற அவர்களின் சுயநலத்தின் காரணமாக என்னை ஏன் வெட்டுகிறார்கள். இதனால், பாதிப்பு அவர்களுக்குதான் என்று ஏன் ஏன் தெரியவில்லை. இதை… நான் எங்கு சொல்வது என்று புரியவில்லையே!
அதுமட்டும் இல்லாமல், போராட்டம் என்ற பெயரில் என்னை வெட்டிச் சாய்க்கின்றனர் இப்படித் தினந்தோறும் நான் அழிக்கப்படுவதால், சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது…. வெப்பச்சலனம் ஏற்படுகிறது ……மழைபொழிவு குறைகிறது.

**ச.பூஜா**
**உயிர் வேதியியல்**
**இரண்டாம் ஆண்டு**

இதற்கு எல்லாம் யார் காரணம்?

இப்படி என்னைப் பற்றிச் சொல்ல இன்னும் நிறைய இருக்கின்றன.

க. சொப்னா
IV பி.எஸ்சி., பி.எட்.,

# என் தந்தை

**அ**திகாரமாய்ப் பேசாமல்
அன்பால் பேசி...
**ஆ**டம்பரமாய் வளர்க்காமல்
ஆசையாய் வளர்த்து...
**இ**ன்னல்கள் இருந்த போதிலும்
இயல்பாக இருந்து...
**ஈ**டில்லாத அன்பால் வாழ்ந்து
**உ**ரிமையாகக் கண்டித்து
**ஊ**க்கம் அளித்து
**எ**ன்னை வழி நடத்தி
**ஏ**ட்டில் இல்லாத கல்வியைத் தந்து
**ஐ**யமின்றி வாழ வழி செய்து
**ஒ**ரு பொழுது உணவருந்தி
**ஓ**யாமல் உழைத்து
**ஔ**டதமாய் விளங்கும்
அஃதொரு சிறப்பு
என் தந்தைக்கே உண்டு!

# அன்புள்ள அம்மாவிற்கு...

இரா. சிவஸ்ரீ
IV பி.எஸ்சி., பி.எட்.,

**ஆயிரம் உறவுகள் இருப்பினும்
என் முதல் உறவு நீயே...
இவ்வுலகமே நீ எனக்குக்
காட்டியது தானே அம்மா
ஈன்ற பொழுதில் இருந்து
என் மீது உயிரை வைத்தவளே...
உன் அன்பிற்கு முன்
அந்த வானமும் சிறியது தான்...
ஊன்றுகோலாக என்னைத்
தாங்கி பிடிக்கும் தாயே...
என்னிடம் வார்த்தை இல்லை உன்னைப் போற்ற
ஏகாதிபதியாய் நான் வாழ வேண்டும் என ஆசைப்பட்ட நீ
ஐயானையன் பெயரைச் சூட்டி மகிழ்ந்தாய்
ஒற்றையாழியான் போல அனைவருக்கும்
என் அறிவு ஒளியை வீசச் செய்தாய்
ஓடைக் கொடுத்து என்னைச் சாதிக்க தூண்டியவளே
ஔவியம் நீக்கி உன் மகளைச் சிறந்தவளாக
மாற்றியதற்கு நன்றி...!**

# எழுச்சி நாயகன்



**எ.ஹாஸ்பி**
**II வணிகவியல்**

# நீ! உன்னை அறிந்தால்...

மு. ரெபேக்கா
II பி.எஸ்சி., பி.எட்.,

வீழும்போது வீழ்ந்தேன்
என எண்ணாதே; எழ
எத்தனித்தேன் என்று
எண்ணிக்கொள்;

தனிமை என்னும் போர்வையில்
மிச்சிறந்த உன்னைப் போக்கடிக்காதே;
உன்னை அறியாமல் நீயே உன்னை
பரிதபித்துக் கொள்ளாதே...,
உள்ளான உன்னை உணர்ந்துகொள்;
உலகை உனதாக்கிக் கொள்...,



உ.திவ்யா
III பி.எஸ்சி., (நுண்ணுயிரியல்)

# இயற்கை

கு. ஹசினா பீவி
I பி.எஸ்சி., பி.எட்.,

தினமும் எழும் சூரியனே...!
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்...?
உனக்கு என்ன அவ்வளவு
சோகம், மழையாய்ப் பொழிகிறாய்...?
வானவில்லே...!
ஏழு வண்ணத்தில் யாருக்காகப் பாதை
அமைக்கிறாய்...?
எல்லாம் மனிதனுக்காக இல்லை ஆனால்
நாம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டோம்...!
இனி இயற்கையைப் போற்றுவோம்
இன்பமாய் வாழ்வோம்!

# உண்மையான நட்பு

கஷ்வி கசன்றா
I பி.எஸ்சி., பி.எட்.,

பழகும் முன் முகம் பார்த்து வரும்
ஒரு சில நட்பு
பழகிய பின் அன்பு பார்த்து வரும்
ஒரு சில நட்பு
சுயநலம் பார்த்து வரும்
ஒரு சில நட்பு!
பணம் பார்த்து வரும்
ஒரு சில நட்பு!
ஆனால் துன்பம் வரும்போது
மட்டுமே தெரியும்
உண்மையான நட்பு!

வானத்தை அளக்கும் அறிவைப் பெற்று
வாழ்வில் உயர்ந்து நின்றாள் அம்மா!

மணப்பந்தலில் அவனும் அமர்ந்து
மலர்களெல்லாம் சூடி வந்து
மக்கள் அனைவரும் வாழ்த்து பாடி
கணவன் கரத்தைப் பிடித்தாள் அம்மா!

கணவனுக்குக் கண்ணாய் அமைந்து
தாரம் என்பதைத் தானே மறந்து
தாய் என்பதைப் புரிய வைத்தாள்
சொல்லுக் கேற்ப தாயுமானாள்

தாய் என்னும் பண்பை உணர்ந்து
தன்னால் இயன்ற சக்தியை எல்லாம்
தன் பிள்ளை வளர்க்க தந்தாளம்மா
தான் பெற்ற செல்வத்தைத் தான்
தலை நிமிர வைத்தாள் அம்மா!

# ஒவ்வொரு நொடியும் முடிவிலா மதிப்புடையது



**எம்.ஜெயக்குமார்**
II பி.சி.ஏ., ஆ பிரிவு

# அம்மா

டி. கிளமான்சியா
I பி.எஸ்சி., பி.எட்.,



என் அன்பு தாயே விழி மாற்றும் சிகிச்சையைப் போல உயிர்
மாற்றும் வழி இருந்தால் என் உயிரைக் கொடுத்து
இருப்பேன் என் உயிரில் கலந்துள்ள உனக்காக என்னை
இந்தப் பூலோகத்திற்கு அறிமுகம் செய்து வைத்தாயே!!!

படிப்பு என்னும் படியில் ஏறி மதிப்பு என்னும் மாளிகையை
அடைய வைத்தாயே, துன்பத்தில் துவளும் பொழுது
“தோழியாய் அரவணைத்து காத்தாயே...”
நான் இன்பத்தில் திளைக்கும் பொழுது நீ வெகு
தூரத்தில் சென்று விட்டாயே.. என் தோற்றம் கண்டு
வெறுக்காமல் கட்டி அணைத்து முத்தம் தந்தாயே!!
இந்த முத்தம் தான் அம்மா எந்நாளும் என் வாழ்வில்
கிடைத்த அரிய வகை பொக்கிஷம், உன் நினைவுகளோடு
கண்களில் கண்ணீருடன் ஏங்கும் உள் அன்பு மகளின் தவிப்பு....

தாய்மையின் அன்பு...
தாய்மையின் வலி என்னவென்று எனக்குத் தெரியும்
அதனால்தான் அன்று அம்மாவுடன் சேர்ந்து நானும்
அழுதேன் நான் பிறக்கையில்...



ஆர்.ஐஸ்வர்யா
II வணிகவியல் அ பிரிவு



**ஜெ.மகேஸ்வரி**

I பி.எஸ்சி., பி.எட்.,

**இரா.சிவஸ்ரீ**

**IV பி.எஸ்சி., பி.எட்.,**





**இரா.சிவஸ்ரீ**

**IV பி.எஸ்சி., பி.எட்.,**

## டி.ஜெனிபர்மேரி

**I** பி.எட்.,






## எம்.ஜெயஸ்ரீ

**I** பி.எட்.,





**வெ.சுவேதா**

**IV பி.எஸ்சி., பி.எட்.,**

# வான் தேவதை



எஸ்.அஞ்சலி
III பி.ஏ., எல்.எல்.பி.,



**ஜெ.ஜெயபரணி**

**I வணிகவியல்**



ஆர்.ஐஸ்வர்யா
II வணிகவியல் அ பிரிவு





திவிக்ரம்
I பி.சி.ஏ.,



ஆர்.நிர்மல்

II ஏவியேஷன் ஆ பிரிவு

# புதியதோர் உலகம் செய்வோம் ...




டாக்டர் அப்துல் கலாம் அறக்கட்டளை சார்பில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடும் பசுமை இயக்கத்தை மேதகு தமிழக ஆளுநர் திருமிகு பன்வாரிலால் புரோகித் அவர்கள் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைத்தல்; உடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்களும் கலாம் குடும்பத்தினர் உள்ளிட்டோரும்



நியூசிலாந்து ஏவியேஷன் ஆட்டெரோவா லிமிடெட் நிறுவனத்துடன் வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் முன்னிலையில் நிகழ்ந்த வேலை வாய்ப்பு மிக்க வான் பரப்பியல் கல்விக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்; அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு.இராபர்ட் வில்லோபி மற்றும் குழுவினருடன் பதிவாளர் பேரா. ஏ.ஆர். வீரமணி, பன்னாட்டு உறவுகள் துறை இயக்குநர் திரு. இராஜேந்திரன் ஆகியோர்.

# வேல்ஸ் சிறகுகள்
# Wings of Vels

## VELS
## GROUP OF INSTITUTIONS

*Marching Beyond 25 Years Successfully*

**VELS**



INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM - CHENNAI
ACCREDITED BY NAAC WITH 'A' GRADE

---

**MAHAVIR INSTITUTE OF MEDICAL SCIENCES (MIMS)**
VIKARABAD, HYDERABAD- TELANGANA
www.mahavirmedicalcollege.org

**MEGHNA INSTITUTE OF DENTAL SCIENCES (MIDS)**
NIZAMABAD, HYDERABAD - TELANGANA
www.meghnadentalcollege.com

---

**SRI VENKATESWARA**
DENTAL COLLEGE & HOSPITAL
Thalambur, Chennai
www.svdentalcollege.com

**VENKATESWARA**
NURSING COLLEGE
Thalambur, Chennai
www.venkateswaranursing.ac.in

---

**VELS**
VIDYASHRAM
CBSE
Pallavaram - Thalambur - Cantonment
www.velsvidyashram.com

**VAELS**
INTERNATIONAL SCHOOL
CISCE / CAIE
Injambakkam, Chennai
www.vaelsinternationalschool.com

---

**VELS**
INTERNATIONAL PRESCHOOL
No. 480, 3rd Main Road, Sri Kapaleeswarar Nagar,
Neelankarai, Chennai
www. velsinternationalpreschool.com



**VELS**
KINDER KIDS
No. 9, Dr. Ranga Road,
Mylapore, Chennai
www.velskinderkids.com

---

**KINDLE KIDS**
INTERNATIONAL SCHOOL
SLF Building, 510 Thomson Road #B2-00, Singapore
www.kindlekids.sg

*VAELS Ravindra Bharathi Global School*
(Managed by Vaels RB Educational Trust)



MOGAPPAIR • NERKUNDRAM • MUDICHUR • KEELKATTALAI • MEDAVAKKAM • NANDAMBAKKAM

---

**CTC**
Cambridge Tutors College
LONDON
South Croydon, Greater London
www.ctc.ac.uk



**SHRI ISARI VELAN MISSION HOSPITAL**
*A Comfort Care Centre*



**150 Bedded FREE Palliative Care Hospital**
www.velanhospital.com

